உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰௪. { வெகுதானிய, ஆடி } மலர் ௪


| | | |
|---|---|---|
| க. | பொன்னெட்டிமாலைச் சர்க்கரைப் புலவர்<br>*சர்க்கரை. இராமசாமிப் புலவர் அவர்கள்* | 125 |
| உ. | யசோதர காவியம்—புத்துரை<br>*திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்* | 134 |
| ௩. | வார்தா கல்வித் திட்டம் கையாளத் தக்கதன்று<br>Sir. P. S. *சிவசாமி ஐயர் அவர்கள்* | 139 |
| ௪. | கல்விச் சீரமைப்பு<br>*திரு. பண்டித. H. N. குன்சுரு அவர்கள்* | 142 |
| ரு. | செங்கோல்<br>*திரு. K. கோவிந்தன் அவர்கள்* | 145 |
| ௬. | முதலாம் இராசராசன் அமைத்த திருக்கோயில்<br>*திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்* | 150 |
| எ. | தமிழ்ச்செய்திகள்<br>*பொழிற்றொண்டர்* | 159 |


செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை, தஞ்சாவூர்.

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௪ | வேகுதானிய, ஆடி | மலர் ௪


## பொன்னெட்டிமாலைச் சர்க்கரைப் புலவர்

சர்க்கரை. இராமசாமிப் புலவர் அவர்கள்

நமக்குத் தெரிந்தபுலவர் பரம்பரையுள் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குக் குறையாமல் இடையீடின்றித் தொடர்புபட்டு வரும் புலமை நிலையம் சர்க்கரைப்புலவர் பரம்பரையாம். இப் புலவர் நிலையமாகிய பூங்கொடி அறிவு மணங்கமழும் புலவர் களாகிய நறுமண மலர்களைப் பூத்துக் கமழினிய கவிநயத் தேனளித்து உதவி வருகின்றது. செந்தமிழ்ப் பாண்டிநாட்டி னொருபகுதியாகிய சேது சமஸ்தானத்தில் திருவுத்தரகோச மங்கை என்னுந் திருப்பதியின் அண்மையிலுள்ளதும் வைஷ்ணவாசாரியராய்த் திகழ்ந்த மணவாளமாமுனிவர் அவதரித்து வளர்ந்து சிறந்ததுமாய கடாரம் என்னும் ஊரிலே சைவ

வேளாண்குலத்தில் சாந்தமே யுருவெடுத்தனைய சாந்தாப் பிள்ளையவர்களுக்கு அவர் தாம் முற்பிறப்பிற்செய்த நற்றவத் தாற் பிறந்த புதல்வர், நாம் இங்கெடுத்துப் பேசும் புலவர் குலத்துக்கொரு முதலாய சர்க்கரைப் புலவராவார். இவர் பொன்னெட்டிமாலைச் சர்க்கரைப்புலவர் எனப் புகழப்படு கிறார். இவர் தமக்கு வழங்குமிப்பெயர் காரணப்பெயராதல் பின்னர்க் கூறப்படும். இப்பெயர் பெறுதற்கு முன்னர் வழங் கிய இவர்தம் இயற்பெயர் யாதென விளங்கவில்லை.

சைவ சமயச் சீலராம் சாந்தாப் பிள்ளையின் புதல்வராய இவ்விளைஞர் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீ னத்தில் எட்டாவது பட்டத்திலெழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி ஞானதேசிகரவர்கள் காலத்தில் சின்னப்பட்ட மெய்தியிருந்த சிவக்கொழுந்து தேசிகரிடத்து இலக்கிய விலக் கண நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் முறையே பயின்று ஒப்புயர்வற்ற பெரும்புலவராயினர். பொன்னியாற்று நன்னீராற் சூழப்பெற்றுத் திருந்திய அருந்தவத்தோர் பலர் நெருங்கி வாழ்ந்த திருவாவடுதுறையில் சின்னப்பட்டம் சிவக் கொழுந்து தேசிகரவர்களிடம் செந்தமிழ் பயின்றறிவு வளம் பெற்ற புலவர், விரைவிற் கவிபாடுந்திறமையும் அமிழ்தினு மினிய சொல்லால் அவை மெச்சப்பேசும் ஆற்றலுமொருங் குடையராத் தம் பிறப்பிடமாகிய பாண்டிநாடு போந்தனர். சேதுநாட்டிற்குச் சென்ற புலவர் அக்காலத்து அந்நாட்டை யாட்சிபுரிந்த திருமலை விஜயரகுநாத சேதுபதிகளைக் காணப் போந்தார். செந்தமிழ்ப் புலவரின் வருகையறிந்த சேதுப் புரவலர் கவிஞரின் கல்வியறி வொழுக்கங்களையும் கவிபாடுந் திறமையையும் அவை மெச்சப்பேசும் சொல்லாற்றலையும் கண் ணுற்றுக் களிபேருவகை யடைந்து நந்தம் புலவரைத் தம் அரசாங்கத்தின் செந்தமிழ் வித்துவானாக அமர்த்திக்கொண் டார்.

இவ்வாறு கல்வியறிவொழுக்க முதலிய நலன் பலவு மொருங்கெய்திய கவிஞர்பெருமானது புகழ், அரசவையிற் புரிந்த அரிய பெரிய சொற்பொழிவுகளானும், புலவரவைக் களத்துப் பொருணயஞ் செறிந்த பாக்களைப் பொள்ளென யாக்கும் வன்மையானும், அரசர்பெருந்தகைக்கு அற்றநோக் கித்தெற்றெனக் கூறும் ஆலோசனைகளானும் நாடோறும் இளம்பிறைபோல் சிறந்து வளரலாயிற்று. இவர் பாடுங் கவி

களினமைந்த பாகெனுமினிமையைப் பாராட்டிச் *சர்க்கரைப் புலவர் என்னும் பெயரைச் சேதுநாட்டரசரிவர்க் களித்தனர்.

சர்க்கரைப் புலவரெனும் பெரும்பெயர்பெற்ற இப்பெரியார் பின்னொருகால் திருமலை விஜயரகுநாத சேதுபதியின் அவைக்களத் தமர்ந்து கம்பராமாயணத்திற் கடல்தாவு படலத்தைப் பிரசங்கஞ் செய்யும்பொழுது அநுமார் கடலைத் தாண்டினார் எனும்பொருள்பற்றி அவையினர் பரவசமடையப் பேசினர். அதனைக்கேட்டு வியப்பெய்திய வேந்தர் புலவரை நோக்கி 'இவ்வளவு பெரிய கடலை அநுமார் எப்படித் தாண்டினார்' என வினவினர். பொருளிற் புலன் முற்றுஞ் செலுத்தியிருந்த புலவர் ஆவேசங்கொண்டார்போல 'இப்படித்தான் தாண்டினார்' என்று கூறி உட்கார்ந்தபடியே மேலெழுந்துயர்ந்து பாய்ந்து மேல் விதானமாகக் கட்டியிருந்த நெட்டிமாலை யறுந்து தம் கழுத்தில்விழ அரசுகட்டிலினண்மையில் வீற்றிருந்தார். இந்நிகழ்ச்சியையறிந்த சேதுகாவலர் பெரிதுமுவந்து புலவருக்குப் பொன்னால் நெட்டிமாலைசெய்து புனைந்ததோடு அற்றைநாண்முதல் 'இராமாயணப் பிரசங்கம் பொன்னெட்டிமாலைச் சர்க்கரைப் புலவர்' என்ற பட்டப்பேரையும், முற்றூட்டாக உழக்குடியென்னு மூரினையும் தந்தச் சிவிகை வெள்ளிக் கட்டியத்தடி ஆகிய விருதுகளையும் சிறுகம்பையூர், ஓரூர், பாகனூர் என்னும் மூன்று கிராமங்களிற் றுண்டுமானியங்களையும் அளித்துப் பாராட்டினர்.

இப்புலவர் பெருமான் நீண்டவாழ்நாள்பெற்று, திருமலை ரகுநாதசேதுபதி, கிழவனிரகுநாதசேதுபதி, விஜயரகுநாத சேதுபதியாகிய இம்மூவேந்தர்காலத்திலும் அரசாங்க வித்துவானாக அமர்ந்திருந்தனர் என்பர். இவர் திருப்புல்லாணி இராமசாமி சந்நிதியிற் புரிந்த இராமாயணப்பிரசங்கத்தைக் கேட்டுவந்த ரகுநாதசேதுபதி சகோதரராகிய முத்துவயிரவநாததேவர் 'கோடகுடி' 'கொந்தலான்வயல்' என்ற இரண்டு கிராமங்களையும் நன்கொடையாக இப்புலவர்க்கு வழங்கினரென்று அவர் கொடுத்த பட்டயம் தெரிவிக்கிறது.

---

* எங்கள் வீட்டிலிருந்த இலக்கணக் கொத்தேட்டுச் சுவடியினிறுதியில் அவ்வேடெழுதிய சுப்பிரமணிய வேளார் மகன் அழகர் என்பார் "பாகைச் சொற்கரையாகப் பகரும், நாகைச் சர்க்கரை நாவலன் வாழ்க" என எழுதியிருப்பதும் இவர்க்கு வழங்குமிப்பெயர் காரணப் பெயராதலை வலியுறுத்தும். நாகை—நயினார்கோவில்.

இவர் நாகை, ஓரூர், கடாரம், சிறுகம்பையூர் முதலிய ஊர்களிலும் வாழ்ந்து வந்தனரென்பது,

“மஞ்சுலவுங்காவாருங் கடார நாகை வளர் ஓரூர்
சிறுகம்பையூரில் வாழ்வோன்
மிஞ்சுபுகழி ராமயணப்ரசங்க விருது கெட்டி
மாலையுஞ் சிவிகையும் பெற்றோன்”

எனவரும் இவரைப்பற்றிய பாடலொன்றால் அறியலாம். இவர் சிறுகம்பையூரிலிருந்த காலத்து அவ்வூர் நிலங்களை வற்றினும் மிக்குவிளையும் ‘கோணச்செய்’ என்னும் நிலத்தை இவர்க்கு உம்பளமாகக் கொடுத்தனர். அந்நிலத்தின் மிக்க விளைவைக்கண்டு வியந்த சிலர், முன்னர் “கரும்பாலையாடுவதேன் கம்பையூர் கோணச்செய்விளைவதேன்” என்னும் வினாவையெழுப்பிச் “சர்க்கரைக்குச் சர்க்கரைக்கு” என விடையு மிறுத்தனர். இம்மொழி இன்னும் அந்நாட்டில் வாழும் பொதுமக்களிடை வழங்குவதை யாவரும் அறிவர். இம்மொழியிலிரண்டாவதாக வந்துள்ள ‘சர்க்கரைக்கு’ என்றசொல் ‘சர்க்கரைப்புலவருக்கு’ எனப்பொருள்தந்து இவர்பெற்ற வயலின் வளத்தையும் இவர் கவிதையினினிமை யையும் விளக்குதல் காணலாம்.

ஒருநாள் இப்புலவர் பெருமானின் இனிய பாக்களைக் கேட்டுச் சிந்தைமகிழ்ந்த சேதுபதியவர்கள் பலசொல்லிக்கவி நலத்தைப் பாராட்டினர். அதுகேட்டுப் பொறாத சவ்வாதுப் புலவர் தமது கலைச்செருக்கால், சர்க்கரையின் குணத்தையும் சவ்வாதின் மணத்தையுங் குறித்துச் “சர்க்கரைதொண்டை மட்டும், சவ்வாது கண்டமட்டும்” எனவிநயமும் வேடிக்கையு மாகச் சொல்லி வாய்மூடுமுன் நம் சர்க்கரைப்புலவரவர்கள் தொண்டையுங் கண்டமும் ஒன்றே யென்னும் பொருள்பட “அதுவும் அந்தமட்டுந்தானே” என்றனர். அதுகேட்ட அரசரும் அவையினரும் இவ்வாறு புலமைப் புலிகளின் வாயை ஒரு சிறுமொழியானே யடக்கும் இவர்தம் பெற்றிமையைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

கோட்டைப்பட்டினமிருந்து கோடகுடிக்கு வந்தபுலவர் தமது பரிவாரங்களுடன் சிறுகம்பையூர்ச்செல்ல எண்ணிச் சிவிகையூர்ந்து செய்யானம் என்னும் ஊரில் வேதியர்வீதி வழியாகச் சென்றனர். அப்பொழுது புலவர் வருகையைக் கண்டு பொறாத அவ்வூர்ப் பார்ப்பனரொருவர் தமது மந்திர

வன்மையால் புலவர் பரிவாரங்களை நடக்கவொண்ணுமற் செய்து சிவிகை செல்லாமற் றடுத்தனரெனவும், அஃதறிந்த புலவர் தம் வழிபடுகடவுளை மனத்துட்கொண்டு,

"சத்யரகுராம தாசகின்சீர் கொண்டாடும்
வித்துவா னுண்மை வெளியாகச்—சுற்றுமனைச்
செய்யானப் பார்ப்பான் சிவிகைதடுத் தான்சிவனேர்
ஐயாநற் புத்தி யருள்"

என்ற செய்யுளைப் பாடக்கண்டு ஒன்றுந்தோன்றுமற் றிகைப் புற்றுநின்ற வேதியர்கள் திகில்கொண்டு தாம் அறியாமையாற் செய்த இப்பிழையைப் பொறுத்து இனி எவ்விதத்தீங்கும் நேராமல் நல்வாக்குத் தரவேண்டுமெனப் பணிந்துவேண்ட அவ்வாறே நம்புலவர் வாக்களித்துச் சென்றனரெனவும் கூறுப.

இரகுநாதசேதுபதியவர்கள் அரசுகட்டிலேறியஞான்று தம் நாட்டிற் கலகமும் குழப்பமும் நேர்ந்ததனல் மதுரைத் திருமலைநாயகரின் ஆதரவைப்பெற்றுப் பகைவரையடக்கி மதுரைமீது படையெடுத்துவந்த மைசூர்மன்னனை இருமுறை முறியடித்து வென்றதோடு தஞ்சையரசனையும் வென்று திருவாரூர், பட்டுகோட்டை யாகிய நகரங்களையும் தம் ஆட்சியுட் படுத்தினர். அவ்வாறு வெற்றிபெற்ற சேதுகாவலர் தமக்கு வெற்றியருளுந்தாயாகிய ஸ்ரீ இராஜராஜேஸ்வரியாரைப் போற்றும் புரட்டாசி நவமிசித்திருவிழாவோடு கவிவாணர்களைப் போற்றுவதே கலைமகளைப் போற்றுவதாமெனக் கருதி அவ்விழாவில் புலவர் பெருமக்களுக்கு அவர்தம் வரிசையறிந்து சீருஞ் சிறப்புஞ் செய்து போற்றிவந்தனர். அக்காலத்து நம்புலவர் பெருமான் அவ்வேந்தரின் வீரப்பெருமிதங் குறித்துப் பாடிய பாடல்கள் பின்வருவன :—

## கட்டளைக் கலித்துறை.

கோல்காட்டும் பொம்மன் மருதப்ப வன்னியன் கொண்டமண்
சால்காட்டுந் தேவை ரகுநாதனை யெதிர்ந் தாருளரோ [பொன்
மால்காட்டு மெட்டப்ப நாயக்கன் பொன்முடி வான்பரியின்
கால்காட்டும் போது பதினு லுலகமுங் கைகொட்டுமே.

கொல்லி விருதுக்கும் வேங்கை விருதுக்குங் கூடல்வைகை
வில்லி விருதுக்கு நேராகுந் தேவை விருதுகண்டீர்
சொல்லி விருது பெறுரகுநாத துரைகுடைமேற்
சல்லி விருதுக்கு டில்லியும் போற்றிடுந் தல்லியென்றே.

பானாட்டு முல்லை ரகுநாத சேது பதியைக்கண்டு
பூநாட்டு மன்னர் தொழாதவர் யார்தெய்வப் பூணணியும்
வானாட் டரம்பையர் மண்ணாட்டரசர் மனத்துக்குநாட்
கானாட்டு வார்கள மர்நாட்டு காவியைக் கண்டுகொண்டே.

ஆர்க்கு மெவர்க்கு மடங்காத பேரைத்தம் மாலையினாற்
நீர்க்கும் விஜய ரகுநாத சேதுமன் சிங்கமென்று
*வார்க்கின்ற பாலை வழியில் வைத்தால்வருங் காகமெல்லாம்
பார்க்கு மிருக்கும் பதைக்குங் குடிக்கப் பயப்படுமே.

இப்பாடல்களின் நயம் உள்ளுந்தொறும் உயர்வளிப்பனவாம்.

இவர் காலத்திய புலவர்கள் சவ்வாதுப்புலவர், அழகிய சிற்றம்பலக் கவிராயர், படிக்காசுப் புலவர், அமுதகவிராயர் ஆகிய இவர்களாம்.

இப்புலவர்பெருமான் இயற்றிய நூல்கள் திருச்செந்தூர்க் கோவை, வேதாந்த சூடாமணியுரை முதலியனவாம். இவை இன்னும் அச்சிடப்படவில்லை. இவற்றுள் திருச்செந்தூர்க் கோவையென்னும் சிறந்தநூல் சொன்னயம் பொருள்நயஞ் செறிந்து சுவை முதிர்ந்த இவரது கவிவளத்தினை நன்கு விளக்குவதாகும்.

இக்கோவைப்பாடல்களின் சுவைகள் சுவைப்போருள்ளத்தைக் கவருந்தன்மையன. எடுத்துக்காட்டாக:

காட்சி

சீர்கொண்டு வாழ்சந்த னாசலவேலர்செந் தூர்ப்பொழிலிற்
கார்கொண்டு வட்டமதிமேற் பிறையுங் கதிர்த் தனுசும்
ஏர்கொண்ட மீனமுங் கொண்டு கும்பங்கொண் டிலங்குசிங்க
நேர்கொண்டு கர்க்கடகங் கொண்டிங் கோர்வல்லி நின்றதுவே.

பொய்பாராட்டல்

வேலானது சந்தனாசல வேள்கைக்குள் மேவியதும்
மாலானவர் கைக்குள் வாள்போ யொளித்ததும் வண்மை
கொண்மான்

* பாலைவைத்தால் காகங் குடிக்கப் பயப்படுமென்றது, முன்னர் காகம் சித்திரகூட பருவதத்தில் இராகுநாதனாற் கண்ணிழந்த வச்சத்தாலென்க. அந்த ரகுநாதனே இவனென்பது கருத்து. ஒருவர் வீரச்செயலைப் பாராட்டுங்கால் அவர் பெயரைச் சொன்னால் கறந்த பாலுங் காகங் குடியாதென்னும் பழமொழியைச் சுட்டியதென்பாருமுளர்.

ஆலால முண்டவர் கைக்குட்புகுந்தது மஞ்சொன்முற்றும்
பாலான மாதுவிழிகண்டு நாணிப்பயஞ் செனித்தே

எனவரும் இரண்டு பாடல்களையும் நோக்கின் இவ்வுண்மை புலனும்.

வேதாந்தசூடாமணியென்னும் நூலினது பொருளை உலகத்தாருணரும்படி தெளிவுபெற வுரைசெய்துதரல்வேண்டு மெனச் சேதுபதியவர்களின் அமைச்சராய தாமோதரம் பிள்ளையவர்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டதற்கிணங்கிய இப் புலவர் பெருமான் அவ்வேதாந்தநூற்குச் சித்தாந்தப் பொருட்டிறனும் அமைய விரித்துரை செய்தனர் என்பது,

"உரைதரு வேதாந்த சூளாமணியுட் பொருளை
யுலகிலுள்ளோ ருணரவுரை செய்கவெனக் கடல்சூழ்
தரையரையன் சேதுபதி யமாத்தியனுந் தாமோ
தரன்கங்கா குலதிலகன் தகுதிபெறச் சாற்ற
வரையறுத்துச் சித்தாந்தப் பொருட்டிறனுந் தோன்ற
வகுத்தன னற்றுறைசை நமச்சிவாய தேசிகன்ருள்
பரவுசிவக்கொழுந்து நிதியருள் கல்விக் கடலைப்
பருகுமுகில் சர்க்கரைநற் பாவலவர் கோனே

என அந்நூன்முகத்து வரும் சாமிநாதபிள்ளை யென்பவ ரியற்றிய பாயிரத்தால் நன்குபெறப்படும்.

இந்நூற்கு இவரியற்றிய உரையானது வேதாந்தநூலென வழங்குமிந் நூற்பெயரும் சித்தாந்தமும் பெயர்வகையா லொன்றேடொன்று மாறுபாடுள்ளதுபோல இருநூலும் தோன்றியதன்றி இவையிற்றின் பொருள் ஒன்றேயாம் என் பதனை நன்கு விளக்கிச் செல்கின்றது. இந்நூலுரையில் தொல்காப்பியம், நன்னூல், முதலியவற்றின் இயற்றமிழ் விதி களையும், பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து என்பவற் றின் தமிழிற் கலந்த வடமொழிப் பிரயோக விதிகளையுந் தழுவி உரை கூறிச்செல்கின்ருர். இந்நாலுரையால் இப்புலவ ரின் உரைத்திட்பமேயன்றி, தொல்காப்பியம், இறையனாரகப் பொருளுரை, நன்னூல், பிரயோகவிவேகம், இலக்கணக் கொத்து முதலிய இலக்கண நூல்களிலும், தருக்க நூல்களி லும், திருமுகப்பாசுர முதலிய திருமுறை நூல்களிலும், சைவசித்தாந்த சாத்திரங்களிலும் சங்கத்தொகை நூல்கள் இராமாயணம் முதலிய இலக்கிய நூல்களிலும் இவருக்குள்ள நிரம்பிய புலமையையும் தெள்ளிதின் உணரலாம்.

இவர்காலத்து 'இலக்கணக்கொத்து' என்னும் நூலை யிகழ்ந்துரைத்தவர்களைக் கண்டித்து இவ்வாசிரியர் இந்நூன் முகவுரையில் "அரிய இலக்கணம் என்பதற்கு வடமொழிப் பிரயோகந் தமிழிற் கலந்தன தமிழர்க்கொளிக்குமாதலின் பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து இவற்றைய றிக.......... இஃதுணரார் இலக்கொணத்தையிகழ்வர் அவர்களை நம்பற்க" என்ற அடிகளால் அதன் பெருமையைக் கற்போருள்ளத்து நிலைக்கச்செய்தது உற்றுணரத்தக்கது.

உ

முத்துவியிரவநாதசேதுபதி யவர்களால், பொன்னேட்டிமாலைச் சர்க்கரைப்புலவருக்கு, கோடகுடி, கொந்தலான்வயலென்ற இரு கிராமங்களை முற்றூட்டாகக் கொடுத்தற்குப்

## பட்டயம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலியவாஹன சகாப்தம் ௲௬௱௩௰௩ (கி.பி. 1711) இதன்மேற் செல்லாநின்ற கரநாம ஸம்வற்சவத்தில் தெட்சணாயணத்தில் வருஷருதுவில் கார்த்திகைமாசத்தில் சோமவாரமும் புனர்பூசநக்ஷத்திரமும் சித்தநாமயோகமும் பாலவாகரணமும் கூடின சுபதினத்தில் தேவை நகராதிபன் ராமநாதசுவாமிகாரியதுரந்தரன் சிவபூஜா துரந்தரன் பரராஜ சேகரன் பரராஜ தேசசிங்கம் இரவிகுலசேகரன் சொரிமுத்து வன்னியன், அரியராயர் தளவிபாடன், வாக்குத்தப்புவாராக் கண்டன், மூவராயர்கண்டன், மண்டநாடு கொண்டுகொண்ட நாடு கொடாதான், பட்டமானங்காத்தான், துட்டராயர் கண்டன், புவனேகவீரன், வீரகஞ்சுகன், வீரவளநாடன், விரமார்த்தாண்டன், பரதவித்தியாதரன், இயல் வித்தியா தரன் பரதளவிபாடன் அரிகொல் அரசுதன் அத்தமபாகண் டன் சாடிக்காரனகண்டன், சாமித்துரோகிகள் மிண்டன் பஞ்சவன்ன ராகுத்தன் பனுக்கு வராக்கண்டன் † கொட்ட மடக்கி வையாளிநாருயணன் இவுளிபாவடிமிறித்தேறுவார் கண்டன் இளஞ்சிங்கம் பகைமன்னர் சிங்கம் துரைராயன் ஆற்றிற் பாசசி கடலிற் பாசசி மதப்புலி வணங்காப்புலி அடைக்கலங்காத்தான் தாலிக்கு வேலி சத்திராதிகள் மிண் டன் வன்னியராட்டந்தவிழ்த்தான் மேவலர்கள் கோளரி மேவலர்கள் வணங்குமிருதாளினன் வீரகெம்பீரன், தொண்

† இராமலிங்கந்துணே.

டித்துறை காவலன், துரகரெவந்தன், அநுமகேதனன், கொடைக்குக் கர்னன், பரிக்கு நகுலன், குன்றனை மேருவிற் குன்றுவளைகுணில் பொறித்தவன், திலகநுதல் மடமாதர் மடலெழுத வஞ்சுமுகன், விசய லட்சுமிகாந்தன், சகலகலை விற்பன்னன், காமினி கந்தர்ப்பன், அட்டதிக்குமனோபயங்கரன், துட்டநிக்கிரக சிட்டபரிபாலன், வீரதண்டை சேமத்தலை விளங்குமிருதாளினன் சேதுகாவலன், வாமாதிபனு துகவூர்க் கூற்றத்துக் காத்தூரான், குலோத்துங்க சோழ நல்லூர்க் கீழ்பால் விரையாத கண்டன், ஹிரணியிகர்ப்பயாஜி ரெகுநாத தேவர் மருமகன், செம்பிநாட்டில் திருவுத்தரகோசமங்கையிலிருக்கும் கடம்பதேவர் புத்திரன், விஜய ரெகுநாத சேதுபதி சகோதரரான முத்துவயிரவநாத தேவரவர்கள் கிடாரத்திலிருக்கும் சாந்தாபிள்ளை புத்திரன் ராமாயணப் பிரசங்கம் சர்க்கரைப்புலவருக்கு ராமசுவாமி சந்நிதியில் வேதபாரகரும் இயலிசை நாடகத் தமிழ் வித்தியாதரருங் கூடிய சபையில் ராமாயணப் பிரசங்கத்துக்குப் பரிசாய் இராமசாமி பட்டாபிஷேகத்தில் கட்டளையிட்ட கிராமமாவது வெள்ளாம்பத்தில் சாத்தனிவயலுக்கும் ஏம்பற்குளத்துக் காலுக்குத் தெற்கு மஞ்சக்குடிப் புரவாகிய வலையன் வயலுக்கும் கிழ்க்காவனூருக்கும் கிழக்கு விதத்தூருக்கு மேற்படியூர்ப்புரவாகிய பொத்தையன் வயலுக்கும் வடக்கு, ஆசான் வயலுக்கும் ஏம்பற் குளத்துக்கும் மேற்கு ஆக இந்த நான் கெல்லைக்குட்பட்ட கோடகுடி கொந்தலாம் வயல் நஞ்சை புஞ்சை மாவடை மரவடை திட்டுத்திடல் மேல் நோக்கிய மரம் கிழ்நோக்கிய கிணறும் நீரும் பாசி முதலிய குடிபடை பள்ளுப்பறை இறைவரி ஊழியம் உலுப்பை சகலசமுதாய வளப்பிரயோசன நிதி நிக்ஷேப சலதருபாஷாண வ்ருத்விசதுவென்று சொல்லப்பட்ட அஷ்டபோக தேசகாசியங்களுக்கும் தானவிக்கிரயங்களுக்கு யோக்கியமாக சந்திரார்க்க சந்ததிப்பிரவேச புத்திரபௌத்திர பாரம்பரையாகச் சருவமானியமாகவாண்டனுபவித்துக் கொள்ளவும். இந்தக் கிராமத்துக்கு யாதாமொருவர் பரிபாலனம் பண்ணின பேர்கள் காசியிலேயும் மற்றைப்புண்ணிய ஸ்தலங்களிலேயும் பெரியோர்கள் சந்நிதானங்களிலேயும் ராமசுவாமி சரித்திரங்களாகிய இராமாயணத்தைக் கேள்வியானவர்கள் எந்தப் பலத்தை அடைவார்களோ அந்தப்பலத்தை அடைவாராகவும். இந்தக் கிராமத்துக்கு அஹிதம் பண்ணினவர்கள் ராம

சுவாமி சரித்திரத்தை யசாத்தியமாக நினைத்தவர்கள் போகின்ற தோஷத்திலேயும் கங்கைக்கரையிலேயும் தனுக்கோடிக் கரையிலேயும் ராமபக்தரையும் சிவபக்தரையும் இம்மிசை பண்ணின தோஷத்திலேயும் அடைவாராகவும்.

"இறுவரம் பிலிராம வென்றோ ரும்பர்
நிறுவ ரென்பது நிச்சய மாதலான்
மறுவின் மாக்கதை கேட்டவர் வைகுந்தம்
பெறுவ ரென்பது பேசவும் வேண்டுமோ"

## ஜைன சமயத்தவரால் செய்யப்பட்ட
# யசோதர காவியம்—புத்துரை

திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்
காஞ்சீபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 2, பக்கம் 64)

இருவரும் சரிதை சென்ற நெறிமுறை.

28. வில்லின தெல்லை [1]நோக்கி மெல்லடி பாவி கண்ணு
னல்லருள் புரிந்து யிர்க்கண் ணகைமுத லாய நாணி
யில்லவ ரெதிர்கொண் டீயி [2]னேற்றுணு முளத்தராகி
நல்லற வமுத முண்டார் நடந்தனர் வீதி யூடே.

முன்பாடம் :—[1]கண்ணு னோக்கிமேல் லடிகள் பாவி.
[2]னெதிர் கொளுண் டியரு மாகி.

பொருள் :—அமுதம் நல் அறம் உண்டார் வில்லின் அது எல்லை கண்ணால் நோக்கி மெல் அடி பாவி உயிர்க்கண் நல் அருள் புரிந்து நகை முதலாய நாணி இல்லவர் எதிர் கொண்டு ஈயின், ஏற்று உணும் உளத்தர் ஆகி வீதி ஊடே நடந்தனர்.

பொழிப்புரை :—உயிருக்கு இன்பந்தருதலால் அமிர்தம் போன்ற ஸ்ரீஜினதருமத்தின் பெருமையைக்கற்று அறிந்த அபயருசியும், அபயமதியும், தத்தம் நேரில் ஒரு வில்லின் அளவைக் கண்ணால் பார்த்தபடி, மெல்ல மெல்ல அடிகளை எடுத்து வைத்து, உயிர்கள் இடத்து நல்ல அன்பு உடையவர் ஆகியும், வழியிடையே நிகழ்கின்ற நிகழ்ச்சிகளைக் கண்டு நகைத்தல், உரைத்தல் முதலியவை, இல்லாதவர்கள் ஆகியும், பெருமை பொருந்திய சிராவகர்கள், தாங்களாகவே எதிர்கொண்டு அழைத்துக் கொடுக்கப்படும் உணவை மட்டும் பெற்று உண்ணும் மனத்தினர் ஆகியும் அவ்விராச புரத்தின் வீதியில் நடந்து சென்றனர்.

குறிப்புரை :—அது—அசை. நல்அறம்—ஸ்ரீஜின தருமம். உண்டார்—கற்று அறிந்தார். ஏ—அசை.

சிறப்புரை :—வில்வினது எல்லை நோக்கி— "நூற்கதிக் கோண்டு கண்ணால் நுகத்தள வேல்லை நோக்கி" (சீவகசிந். 2826 "காற் றெதிரின்றி மண்ணிற் கண்ணுகத்தளவு நோக்கி" மேரு மந். 850) ஜைன துறவிகள் ஒருவர் வீட்டிலும் சென்று உணவு கேட்கமாட்டார்கள். அவர்கள் உரியகாலத்தில் மௌனமாக வீதியிடையே நடந்து செல்லுவார்கள். அவர்களைத் தங்கள் வீட்டின் எதிரில் காணும் சிராவகர்கள், தாங்களாகவே அத்துறவிகளின் முன்சென்று அவர்கள் அடிகளில் வணங்கித் தம் மனையில் உணவு கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுதல் வழக்கு. அதனை "காற்றெதிரின்றி மண்ணிற் கண்ணுகத்தளவு நோக்கி மாற்றினை யேரியும் நூல்வாள் வாய்ப்பிடி நடப்பதே போ, லேற்ற நாண் மீனேடேகும் பிறையெேன வில்லங் தோறும், மாற்றின் வேந் துயரந்தீர மருந்துண்டான் போலப் புக்கான்" (மேரு மந். 850) "செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான், நல் விருந்து வானத்தவர்க்கு" (திருக்கு—86) என்ற திரு மொழியாலும் அறிக. அத்திருமொழியின் பொருள்—சரிதை செல்லும் துறவிகளாகிய விருந்தினர்கட்கு உணவு கொடுத்துப் பாதுகாத்தும், தங்களிடத்துத் தாமாக வரும் சிராவகர்கள், சுற்றத்தினர்கள் முதலிய விருந்தினர்கட்கு உணவு கொடுத்துப் பாதுகாக்கும் விருப்பம் உடையவனாய் எதிர் பார்த்தும் வாழ்கின்றவன், தேவர்கள் செல்வத்தை நுகருதற்கு ஒரு அரிய சிறந்த விருந்தினன் ஆவன். (தேவகதியில் பிறப்பன் என்றபடி) அத்திருமொழிக்கு இவ்வகையன்றி வேறுவகையால் கூறப்படும் பொருள் கூறுவார் கருத்தன்றிக் கவிக்கருத் தன்று. "மண்ணக

மாதர்க் கணியாய கண்ணகி, விண்ணக மாதர்க்கு விருந்து" (சிலப்பதி—மதுரை—கட்டுரை—ஈற்றுவெண்பா). (உ௫௪)

அவ்விருவரையும் சண்ட கருமன் காணல்.

29. அண்டல ரெனினுங் கண்டா லன்புவைத் தஞ்சு நீரார்க்
கண்டனன் [1]கண்ட சண்ட கருமனு மனங்க லங்காப்
புண்டரீ கத்தின் [2]கொம்பும் பொருவிலா மதனும் போன்று
கொண்டிளம் பருவ மென்கொல் குழைந்திவண் வந்த
[தென்றான்

முன்பாடம்:—[1]கண்டு. [2]கொம்பு பொருவில்மன் மதனும்.

பொழிப்புரை:—அரசனின் ஆணைப்படி மக்கள் இருவரைத் தேடிச்சென்ற சண்டகருமன், பகைமை கொண்டவர்களாயினும் கண்டால் அன்பு உடையவர் போல தீது செய்ய அச்சப்படுதற்கு ஏதுவான பண்பினை உடையவர்களாகிய அபயருசியையும், அபயமதியையும் கண்டனன். கண்ட அச்சண்டகருமனும், மனக் கலக்கம் உடையவனாய்த் தாமரை மலரிலே வீற்றிருக்கின்ற அழகால் ஒப்பில்லாத இலக்குமி தேவியையும், மன்மதனையும் போன்றுள்ள இளைய பிராயத்தினராகிய இவர்கள், வாடிய உடலினராய், இந்நகருள் வந்தது எதன்பொருட்டு என்று நினைத்தான்.

குறிப்புரை:— அண்டலர்-பகைவர். புண்டரீகம்-தாமரை. கொம்பு-இலக்குமி; ஆகுபெயர். மதன்-மன்மதன்; விகாரம். குழைந்து-வாடி. இவண்-இந்த நகருள். என்-எதன்பொருட்டு. கொல்-வியப்பிடைச்சொல்.

சிறப்புரை:—சண்ட கருமனும்-உம்மை, அவனின் கொலைத் தொழிலின் இழிவைச் சுட்டியதால், இழிவு-சிறப்பும்மை (உ௫௫)

அவ்விருவரையும் சண்டகருமன் பற்றிப் போதல்.

30. என்மனத் தெண்ணி நெஞ்சத் திரங்கிய [1]கரும னேவல்
தனைநினைந் தவர்க டம்மைத் தன்னுழை யவரின் வவ்விச்
சினமலி தேவி கோயிற் றிசைமுக மடுத்துச் சென்றான்
இனையது பட்ட [2]தேன்னேன் றிளையரு மெண்ணி னாரே.

முன்பாடம்:—[1]மன்ன. [2]தின்றேன்.

பொழிப்புரை:—மேற்கூறியவாறு தன் மனத்துள் எண்ணி நெஞ்சில் இரக்கங்கொண்ட சண்டகருமன், தன் மன்னன் ஆணையை நினைந்து அவ்விருவர்களையும், தன்னுடன் வந்தவர்களால் பற்றிக்கொண்டு கோபம் மிக்க சண்டமாரி தேவியின் கோயில் பக்கமாக, அக்கோயிலை நெருங்கிச் சென்றான். அவ்

விளைஞர் இருவரும் இன்று இப்படிநேர்ந்ததன் ஏதுயாது என்று எண்ணினார்கள்.

குறிப்புரை :—என-மேற்கூறியவாறு. ஏவல்-தன் மன்னன் ஆணை. தன்னுழையவர்-தன்னுடன் வந்தவர். இனையது-இந் நிகழ்ச்சி பட்டது-நேர்ந்தது. என்-யாது. இளையரும்-அபய ருசியும், அபய மதியும். ஏ-அசை. (உ௯)

அபயருசி, அபயமதிக்கு அஞ்சாமை கூறல்.

31 [1]வன்செயல் மறவர் சூழ மதியமோர் மின்னே டொன்றித்
தன்பரி வேடந் தன்னுட் டானனி வருவ தேபோ
லன்பினு லையன் தங்கை யஞ்சுத லஞ்சி நெஞ்சிற்
றன்கையான் முன்கை பற்றித் தானவட் [2]கோன்று சொல்வான்.

முன்பாடம் :—[1]வன் சோல்வாய். [2]கோண்டு.

போருள் :—மதியம் ஓர் முன்னே டொன்றி தன் பரி வேடம் தன்உள் தான் நனி வருவது ஏ போல் வன் செயல் மறவர் சூழ ஐயன் தங்கை அஞ்சுதல் அன்பினால் நெஞ்சில் அஞ்சி தன்கையால் முன்கைபற்றி தான் அவட்கு ஒன்று சொல்வான்.

போழிப்புரை :—சந்திரன், ஒரு மின்னல்கொடியுடன் கூடித் தன் பரிவேடத்தின் இடையே பெருமிதத்தோடு செல்லுதல் போல, வலிய செயலை உடைய கொலைஞர், தங்களை வளைந்துவர (மின்னல்கொடி போன்ற தன் தங்கையுடன் செல்லுகின்ற மதி யன்ன) அபயருசி, தன் தங்கை அச்சப்படுதலைக் கண்டு அன்பி னாலே தன் நெஞ்சில் வருத்தம் உடையவனாய்த், தன்கையினால் தன் தங்கையின் முன் கையைப்பற்றி அவன் அவளுக்குச் சில சொல்லா நின்றான்.

குறிப்புரை :—ஐயன் — அபயருசி. தான் — அபயருசி; தங்கை—அபயமதி. அவள்—அபயமதி. ஒன்று—சில. (உ௭)

32. நங்கை நீ யஞ்ச னெஞ்சி னமக்கிவ ணழி வொன் றில்லை
இங்குநம் முடம்பிற் கேத மெய்துவ திவரி னெய்தி
னங்கதற் கழுங்க லென்னை யதுநம தன்றெஃ றன்றோ
மங்கையா மதனை முன்னே மத்தினில் விடுத்த தென்றான்.

போருள் :—நங்கை நீ நெஞ்சில் அஞ்சல் நமக்கு இவண் அழிவு ஒன்று இல்லை. இங்கு நம் உடம்பிற்கு எய்துவது ஏதம். இவரின் எயதின் அங்கு அதற்கு அழுங்கல் என்னை அது தங்கை நாம் முன்னே அதனை நமது அன்று என்று அன்றே மனத்தின் விடுத்தது என்றான்.

பொழிப்புரை :—தங்கையே ! நீ, மனத்துள் வருந்தாதே, நமக்கு இப்போது கேடு சிறிதும் இல்லை. இன்று நம்முடைய உடம்பிற்குப் பொருந்துவதாகிய துன்பம், இவர்களால் பொருந்தின், அதன் பொருட்டு வருந்துவதால் பயன் ஒன்றும் இல்லை. தங்கையே! நாம் சுதத்த முனிவரால் நம் பிறப்புக்களை உணர்ந்தபோதே இவ்வுடலை, நமது அன்று என்று அல்லவா மனத்தினின்றும் விடுத்தனம் என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—நங்கை, மங்கை — அபயமதி, தங்கை. ஒன்று—சிறிது. அங்கு, அது—அசைகள். அதனை—உடலை. முன்னே—சுதத்த முனிவரால் பிறபுக்களை உணர்ந்த போதே. இல்—உருபுமயக்கம். (உயஅ)

33. அஞ்சின மெனினு மெய்யே யடைபவந் தடையு மானு
லஞ்சுத லதனி னென்னை [1]பயனமக் கதுவு மன்றி
யஞ்சுத றுன்பந் தானே யல்லது மதனிற் சூழ்ந்த
நஞ்சென வினைக ணம்மை நாடொறு நலியு மென்றான்.

முன்பாடம் :—[1]பயநமக்.

பொருள் :—அஞ்சினம் எனினும் அடைப வந்து அடையும் மெய்யே ஆனால் அஞ்சுதல் நமக்கு பயன் என்னை அதுவும் அன்றி அஞ்சுதல் துன்பந்தான் ஏ அல்லதும் அதனின் சூழ்ந்த, என்று மூன்று அடிகளையும் கொண்டு கூட்டுக.

பொழிப்புரை :—அபயருசி, தன் தங்கையைப் பார்த்து நாம் துன்பத்துக்கு அஞ்சினம் ஆயினும், மக்களை வருத்துதற்கு ஏதுவான துன்பங்கள் அவர்களைச் சேர்ந்தே தீரும் என்பது உண்மையே. ஆனால், அஞ்சுதலாகிய அதனாலே நமக்குப் பயன் ஒன்றும் இல்லை. அதுவும் அன்றி, அஞ்சுதலால் துன்பமே பெருகும். அல்லாமல் அஞ்சுதலால் சேர்ந்த நஞ்சு போன்ற தீவினைகள், நம்மை எக்காலத்தும் வருத்தா நிற்கும், என்று கூறினான்.

குறிப்புரை :—அஞ்சுதல் அதனின்—அஞ்சுதலாகிய அதனாலே. அதனின் சூழ்ந்த—அஞ்சுதலால் சேர்ந்த. தான்—அசை. ஏ—தேற்றப் பொருட்டு. உம்—அசை.

சிறப்புரை :—வருப வந்துறுங்களன்றே" (சீவகசிந்—509). "அஞ்சினா யேனு மடைவ தடையுங்காண், துஞ்சினா யென்று வினைவிடா" (அறநெறிச்சாரம்—189. (உடுகூ)

தொடரும்.

# "வார்தா கல்வித் திட்டம்" கையாளத் தக்கதன்று.

Sir. P. S. சிவசாமி ஐயர் அவர்கள்
பங்களூரில் பேசியது.

(*Madras Mail 15—7—38*)

தற்காலக் கல்விமுறை அடுத்தடுத்து வன்மையாகக்கண்டிக்கப்பெறுகின்றது. அது திருத்தவொண்ணாதபடி செம்மையுற்றநிலையில் உள்ளதென யான் கூறவில்லை. பல குறைபாடுகள் இருப்பதை யாவருமறிவர். பல திருத்தங்களைக் கருதியதுமுண்டு; செய்ததுமுண்டு.

இக்காலக் கல்வியானது மனிதர்களை வாழ்க்கையில் தொழில் புரியத் தக்கவர்களாய் ஆக்குவதில்லை எனக் கூறுவது பெருவழக்காயிருக்கின்றது. அயன்மொழி வாயிலாய் கல்வி கற்பிப்பது மாணவர்க்குப் பெருஞ்சுமை என்றும், அவர்களின் ஆற்றலைப் பீடழிக்கின்றதென்றும் கூறப்படுகின்றது. கல்வித் தலைவர்கள் அனைவரும் இக்குறைகளைக்கண்டு மொழிப்பாடங்கள் அல்லாத கலைநூல்களைத் தாய்மொழியில் கற்பிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

உயர்தரப் பள்ளிகளின் மேல்வகுப்புகளில் கலைநூல்களை ஆங்கிலமொழியிற் பயிற்றுவிப்பதன் காரணம் பெரும்பாலும் பெற்றோர்களின் விருப்பமே ஆகும். சென்னைநகரிலும், வெளியூர்களிலுமுள்ள உயர்தரப்பாடசாலைகளின் ஆட்சியில் தொடர்புடைமையால் இது எனக்கு நேரே தெரிந்த செய்தி.

ஆங்கிலத்தில் படிப்பித்தால் ஆங்கிலமொழிப் புலமை திறம்பெறும் என்பது பெற்றோர் கருத்து. பண்டைநாளில் படித்துத் தேறியவர்களுடன் ஒப்புநோக்க, இற்றைநாளின் மாணவர்கள் ஆங்கிலமொழித்தேர்ச்சிமிகமிகக்குறைந்திருக்கின்றனர்என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. பிள்ளைகள் ஆங்கிலமொழி வல்லுநராய்த் திகழவேண்டுமெனப் பெற்றோர்கள் பெரிதும் விழைகின்றனர். என்றாலும் சென்னைமாகாணத்தினர் மொழிப்பாடம் அல்லாத அறிவுநூல் அனைத்தையும் தாய்மொழியிலே கற்கவேண்டுமெனவே வாதிக்கின்றனர்.

எட்டுப்படிப்பும், பொருள் விளக்கமற்ற நெட்டுருப்படிப்புமாயிருக்கக் காண்பதல்லது பயனுள்ளகல்வி அருமையாய்விட்டதெனவும் கூறுகின்றனர். மாணவர்கள் கண்ணினால் பொருள்களை உற்றுநோக்கவும், கையினால் வினைசெய்யவும், கருத்தினால் ஆய்ந்து, சிந்தித்துத் தெளிவடையவும் செய்தலும் கூடினால் இக்குறைகள் அகலுமெனஅறிஞர்கள் கூறிவருகின்றனர்.

இந்த நிலையில் காந்தி அடிகள் ஆய்ந்துமுடித்த 'வார்தா கல்வித்திட்டம்' விளம்பரப்படுத்தப் பெறுகிறது. அடிகளிடம் உலகர் வைத்திருக்கும் நன்மதிப்புடனே இக்கல்வித்திட்டத்தையும் யாவரும் கருதிவருகின்றனர். நூலறிவுடன் கல்விநிரம்பாது; பொருளியல், உலகியல் இவற்றை நுண்ணுணர்வால் ஆய்ந்து தெளிவதும் கல்வியின் சிறந்த பண்பெனக் கல்விமான்களும், கல்வித்தலைவர்களும் முன்னரே கண்டுவைத்த கொள்கையாகும்; இதனையே வார்தா கல்வித்திட்டம் வலியுறுத்துகின்றது.

இத்திட்டத்தின் மற்றொருபகுதியும் உண்டு. அடிப்படையான ஒரு கைத்தொழிலை அடுத்தும் அதனைப்பற்றியும் கல்வி முயற்சி முழுதும் நிகழவேண்டுமென்பதாகும். மாணவனுடைய பிள்ளைப் பருவத்தே அவனுடைய எதிர்கால வாழ்க்கையைத் தெரிந்து முடிக்க வேண்டுமென்பது மற்றொரு பகுதி.

உயர்தரப்பள்ளியின் பாடதிட்டத்தில் அடிப்படைத் தொழில் ஒன்றனைப்பற்றியே பலதிறப்பட்ட கலையறிவுகளைப் புகட்டவொண்ணுமா? ஒரு கலாசாலை தேர்ந்துகொள்ளும் அடிப்படைத் தொழில் 'நூல்நூற்றல்' என்று வைத்துக் கொள்ளுவோம். அதனைப்பற்றியே உயிர்நூல், உடல்நூல், நிலநூல், சரிதநூல், தத்துவநூல், பூதபௌதிகநூல், தருக்கநூல் மனநூல், கணிதநூல், பொருள்நூல் ஆதிய கலைஞானங்கள் அனைத்தையும் புகட்டுமாறு யாது? 'நூல் நூற்றல்' எனும் பொருட்கு இயைந்த சில அறிவுநூற்பொருளை ஒருவாறு கற்பிக்கலாமேயல்லது கலைகள் அனைத்தையும் கற்பிக்கலாமென்பது தவறென எண்ணுகின்றேன். இம்முறையில் கற்பிக்கத் தலைப்படும் ஆசிரியன்மார் கிடைத்தற்கரிய நுண்ணறிவும் திறனும் வாய்ந்தவராயிருத்தல் வேண்டுமெனவும் நினைக்கின்றேன். அக்சிலி (Huxley) போன்ற பேரறிஞர் இச் செயற்கருஞ்செயலைப் புரிய முடியுமோ அறிகிலேன் !

பள்ளிப்பயிற்சியில் வேண்டப்படுவது ஒருகலையில் முற்ற முடிந்த புலவனாவதல்ல; பலகலை உண்மைகளையும், பலபொருள்

களின் இயல்களையும் உணர்ந்து கொள்ளத்தகும் பரந்த அறிவும் தெளிந்த சிந்தையும் உடையனுக்குதலே பள்ளிப் பயிற்சியின் நோக்கமாகும்; ஒருபொருளை முற்றத்தெரிக்கும் முயற்சியால் பிறிதொன்றனையும் தெரியாது மறைப்பது ஆசிரியனது வேலையல்ல.

அடிப்படைத் தொழில் என்பதுயாது? அதனைத் தேர்ந்துகொள்ளுவது எவ்வாறு? என்னும் வினக்கள் எழுகின்றன. ஒரு பள்ளிக்கூடத்தில் பலவிதமான தொழிற் பயிற்சிகளையும் மேற்கொள்ளவேண்டுமென்பது கருத்தல்லவென நினைக்கிறேன். பாடசாலையின் சூழலுக்கேற்றதொரு தொழிலையே தேர்ந்துகொள்ளவேண்டும். ஒரு தொழிலையே தேர்ந்துகொள்ளுவதென்றால், மாணவனுடைய திறமைக் கேற்றபடி வாழ்க்கைக்குரியனுக்குவதெங்ஙனம்?

ஒரு மாணவனுக்குரியதான தொழிலைத் தேர்வது அவனுடைய சிறப்பியல்பு, தன்மை, திறமை தகுதிகளையும், அதனைப் பற்றிச் செழுமையுறுதற்கான வசதிகளையும் பொறுத்ததன்றே! நாட்டில் வாழ்ந்துவரும் மாணவன் நகர வாழ்க்கையை நாடுவதுமுண்டல்லவா? நாட்டுப்புறத்திற்கேற்ற உழுதொழில் பயின்றவன் நகரத்தில் செல்லுங்கால் வாழ்வது எங்ஙனம்? நாட்டிலிருப்பவர் நகருக்குச் செல்ல வொண்ணுது என்பது இத் திட்டத்தை வகுத்த மேதாவிகளின் கருத்தா? மக்கள் நாட்டுப்புறங்களை வறிதாக்கி அகல்வது பாராட்டக்கூடியதல்ல; அதன் காரணங்களை ஆராய்ந்து பரிகரிப்பதுதான் மதியுடைமையாகும். நகரவாழ்க்கையின் பல திறப்பட்ட கவர்ச்சியே இதன் காரணமாகும்.

நகரிற்பிறந்தவன் நகரிலே வாழவும், நாட்டிற் பிறந்தவன் நாட்டிலே வாழவும் செய்யக்கூடிய கல்வித்திட்டம் எதுவானுலும் அதனை ஏற்கமுடியாது. நாட்டுப்புறக்கல்வி முறையால் மாணவர்கள் கைத்தொழில் முயற்சியில் மதிப்புவைக்கச் செய்வது நலந்தான். ஆனுல் நாட்டிலாதல், நகரத்திலாதல் அடிப்படைத் தொழில் ஒன்றுபற்றியே கலைகளனைத்தையும் கற்பிக்கமுயல்வது ஏமாற்றமும், பயனில் முயற்சியுமாகும்.

தொழிற் கல்விக்கான பாடசாலைகளும், அறிவுவளர்ச்சிக்கான பாடசாலைகளும் வேறுவேருய் இருத்தல் அவசியம். இரண்டையும் ஒன்றுபடுத்துவது மதியுடைமை ஆகாது.

பள்ளிக்கூடங்களில் ஆக்கப்படும் பொருள்களின் விற்பனைத் தொகையைக்கொண்டு வார்த்தா திட்டத்தில் ஆசிரியர்கட்கு ஊதியம் தரப்படுமெனக் கூறப்படுகின்றது. இதுபோது ஆசிரியர்கட்குத் தரப்பட்டுவரும் ஊதியமே கவர்ச்சியுள்ளதா யில்லை. மாதம் பதினைந்துரூபா சம்பளத்தில் இருபது ஆண்டுகள் உழைப்போமென ஒப்பந் தந்து ஆசிரியர்கள் வேலைகொள்ள வேண்டியிருக்கின்றது. ஆசிரியர்கள்மட்டும் இவ்வளவு குறைந்த ஊதியத்துடன் உழைக்க வேண்டுமென வார்தா திட்டம் கருது வதன் நேர்மை என்ன? இதனைத் தெரிந்துவைத்தும் திறமை யுற்ற ஆசிரியர் பணி செய்யவருவார்களா? காந்தி அடிகள் தன்னைப்போலவே உலகர் அனைவரும் முற்றத்துறந்த முனிவர் களென நினைக்கின்றார்போலும்.

மாணவர்களின் கைவினையால் ஆக்கப்படும் பொருள்கள் விலையாகாவிடில் அரசியலார் அவற்றை வாங்கிக்கொள்ள வேண்டுமாம். இது மிகவும் அசட்டுத்தனமான கொள்கை. பொதுமக்கள் மதிக்காத பொருளை, வரிகொடுப்போர் தலையில் சுமத்துவது என்னநீதி?

வார்தா கல்வித்திட்டமானது பயனற்றது; அறிவுடை யோர் கையாளவொண்ணாதது, இது முடிந்தகொள்கை.

---

**கல்விச் சீரமைப்பு:**—சென்னை கோகலே மன்றத்தில் திரு. பண்டித. H. N. குன்சுரு அவர்கள் இந்திய ஊழியச் சங் கத்தில் நிகழ்த்திய தலைமைப் பேருரை:—

வார்தா கல்வித் திட்டத்தை வகுத்தவர் நூல்நூற்றலை அடிப்படையாகக் கொள்ளக் கருதுகின்றனர். பெரும்பாலான மாணவர் நெசவுத்தொழிலுடன் தொடர்பில்லாத குடும்பங்களி லிருந்து பாடசாலைக்கு வருவர். தொழிற்கல்வி கற்பிப்பிப்ப தாகக்கூறி அனைவரையும் நெசவுத்தொழில் பயிலுமாறு வற் புறுத்துதல் கேடு விளைப்பதாகும். நெசவுத்தொழிலில் முழு நம்பிக்கையையும் வைப்பது தவறு.

மாணவர்கள் ஆக்கும் பொருள்கள் அயல்நாட்டுப்பொருள் களுடனும், பொறிகளால் ஆக்கப்படும் பொருள்களுடனும் போட்டிக்குவரும். இத்தகைய போட்டியில் நிலை நிற்பவை எவையாகுமெனக் கருதவேண்டும்.

இத்தகைய சீர் திருத்தத்தால் இந்திய நாட்டை என்ன உருவத்தில் நிறுவக்கருதுகிறோம் என்பதை செவ்வனம் மனதில் அமைத்துக் கொள்ளவேண்டும். பண்டைக்காலத்து இந்தியாவை ஒப்ப கிராம வாழ்க்கையும், உழவுதொழிலும் மலிந்த நாடாக்குவதா? இற்றைநாளின் உலகியலையொட்டி தொழில் வளம் பெருகிய அயல்நாடுகளைப்போல் இயந்திரத்தொழில்களை வளம் பெற வளர்த்து அயல்நாடுகளுடன் போட்டியில் முற்படுவதா? இவ்விருவேறுவகையான நோக்கங்களில் எதனைக் கைக்கொள்ளுவது என நாம் முடிவுகட்டவேண்டும்.

வார்தாதிட்டமானது கல்வியின் நோக்கத்தை ஒருவாறாக முடிவுகட்டியது; நாட்டின்நிலை யாதாகவேணடுமென கருதிற்றில்லை. என்னைப்பொருத்தவரையில் இந்தியநாடு பண்டை நிலையை எய்தவேண்டுமென யான் கருதமுடியாது.

தொடக்கக் கல்வியும், உயர்தரக் கல்வியும் (Primary and Secondary Education) ஏழு ஆண்டுகளில் முற்றுப்பெற வேண்டுமென வார்தாதிட்டம் கருதுகின்றது. தாய்மொழியில் கல்வி பயிற்றப்படும், அடிமைப்படாத நாடுகளின் கல்விமுறையை ஒத்துப்பாருங்கள். ஒரு நாட்டிலாவது இவ்விருதரக்கல்வியும் இத்தனை குறுகிய கால எல்லையில் முடிவடையக்காணோம். இந்திய மாணவர்களும் அயல் நாட்டு மாணவர்களின் கல்வித்தரத்தில் தாழாத நிலையில் இருக்கவேண்டுவதில்லையா?

கலாசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் இந்திய மொழிகளுக்கு மிகமிக ஏற்றந்தர வேண்டுமெனுங் கொள்கையில் யான் அடிப்பட்டவன். ஆனால் உயர்தரத்தேர்வில் மாணவர்கள் அங்கில மொழிப்பயிற்சியில் போதிய புலமை எய்தாவிடில் பல்கலைக்கழகக் கல்விக்கும், உயர்தரக்கல்விக்கும் நடுவே பருத்த இடைவெளிகிடக்கும். வார்தா திட்டத்தின்படி ஏழாண்டுக் கல்வியும் நிரம்பியபின்னர், சிலபல ஆண்டுகள் அங்கிலம் கற்று அதன்பிறகே பல்கலைக்கழகத்தில் நுழைய வேண்டுமென்பது கருத்தா? பிரஞ்சு, இதாலி, அமெரிகா, செர்மனி முதலிய நாடுகளிற்கூட அங்கிலமொழியின் பயன் மிகுதியைக்கருதி கல்வித்துறையில் அங்கிலமொழிக்கு ஏற்றமான இடத்தைத் தந்திருக்கின்றனர். அயல் நாட்டினராகிய இவர்களுக்கு அங்கிலமொழியில் என்ன சார்பு?

மேனாட்டு அறிஞர்கள் கூர்த்தமதியால் வளர்த்துவரும் கலைச்செல்வங்களின் நுண்பொருள்களை இந்தியர்கள் கற்க

வேண்டியது மிகவும் அவசியம். ஆதலால் அயன்மொழிகளில் எளிதே கற்கக்கூடிய அங்கிலமொழியில் நாமும் புலமை பெறவே வேண்டும்.

கல்விக்கு வாயிலாவது தாய்மொழி யென்பதில் ஐயமில்லை; உயர்தரக் கல்விக்குரிய கலைச்சொற்களை விரைவில் ஆக்கி தாய் மொழியை வளம்பெறச் செய்து கலைநூல்களை செவ்வனம் இயற்றுதல் வேண்டும்.

கல்வியின் ஒவ்வொரு நிலையிலும் அங்கிலமொழிப் பயிற்சிக் குப்போதிய இடந்தரவேவேண்டும்.

கல்வியின் சீர்திருத்தத்தைக் கருதுவோர், மாணவர்க்குத் துணிபும், தன்னம்பிக்கையும் உண்டாக்குவதை முக்கிய நோக்க மாகக் கொள்ளவேண்டும்; வெளியிடப் பயிற்சி, இயற்கையோ டுறைதல், பாசறைவாழ்க்கை, ஆதியதுறைகளில் மாணவர்களை, ஊக்கவேண்டும். தொடக்கக் கல்வியின் இன்றியமையாமை யைப் பேசுவோர், உயர்தரக் கல்வியின் அவசியத்தை மறக்க வொண்ணாது.

கிராமவாசிகள் செழுமையுடன் வாழவேண்டுமாகில்அவர்கள் சிறிதளவுமட்டும் கல்வி கற்பது நலமல்ல. கிராமவாழ்க்கை பற்றிய சிக்கல்கள் மிகப்பல. பண்பட்ட உள்ளமும், கூர்த்த மதியும் உடைய கல்விமான்களின் தொண்டுகளாலன்றி கிராம வாழ்க்கை சீர்பெறமாட்டாது. போர்வீரரும், தண்டத்தலைவரும் இருந்தாலன்றி போரில் எங்ஙனம் வெற்றி வாய்க்காதோ, அதுபோலவே நாட்டுமக்களும், நாட்டுத் தலைவர்களும் கல்வி, அறிவு, ஒழுக்கங்கள்நிரம்பியவரானாலன்றி, நாடு நலமடையாது.

# செங்கோல்.

திரு. K. கோவிந்தன், தமிழ்மாணவன், ஔவைத்தமிழகம்
திருவத்திபுரம்

வடக்கண் வேங்கடத்தையும், தெற்கண் குமரியாற்றையும் எல்லையாகவுடைய, தமிழ் கூறும் நல்லுலகத்தைப் பல்லாண்டுகளுக்கு முன்னர், பல அரசர் பெருமக்கள் செவ்வனே ஆண்டு வந்தார்கள். அவர்கள், மலர்தலை யுலகிற்கு உயிரெனச் சிறந்தவன் அரசனே என்பதை யுணர்ந்தவர்களாதலின், அவர்கள் செங்கோலினர்களாய் இருந்து வந்தார்கள்.

உயர்குடிப்பிறப்பும், பிறந்த குடியை உயரச்செய்யும் ஒழுக்கமும்* அறம், பொருள், இன்பம், வீடென்னும் உறுதிப்பொருளுணர்த்துவனவாகிய அறநூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலம் என்றவற்றின் நூல்களும் ஆகிய இவற்றை, விபரீத ஐயங்களைநீக்கி மெய்ப்பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயின்று, அவை சொல்லுகின்ற நெறிக்கண்ணே

---

* முதனாட் போரில், இராமனுக்கு முன்நிற்க ஆற்றாது, தோற்றோடிப்போந்த இராவணன், இரண்டாம் நாள், தன் தம்பி, கும்பகருணனைத் துயில் நீப்பித்து, அதுகாறும் நடந்தேறிய செய்திகளைக்கூறி, அவனைப் போருக்குச் செல்லுமாறு பணித்தகாலை, "ஆனதோ வெஞ்சமம் அலகில் கற்புடை, சானகி துயர்இனும் தவிர்ந்ததில்லையோ?" "அந்தோ புலத்தியன் வழிமுதல் வந்த பொய்யறு குலத்தியல்பழிந்தது" என்று வருந்தி, பின்னர் முற்பிறந்தான் பணியைத் தலைமேற்கொண்டு போருக்குப் போந்த அவன் ஆங்கே, தன் தம்பி, இலங்கை அறிஞன், வீடணன் தன் பால்வந்து, தன்னை இராமன்பால் வருமாறு வேண்டிய அக்காலை, "குலத்தியல் பழிந்ததேனும் குமரமற்றுன்னைக் கொண்டே, புலத்தியன் மரபு மாயாப்புண்ணியம் பொருந்திற்றென்ன, வலத்தியல் தோளை நோக்கி மகிழ்கின்றேன்." என்று தான் பிறந்த குலத்திற்காக மனமுடையும் அவன் தன் தூய உள்ளத்தை அறிக.

நிற்கும் வன்மையும், எல்லாவுயிர்க்கும் பிறப்பொக்குமாகலின், உயர்குடியிற் பிறந்தானாயினும், செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர் குற்றங்கூறாமை முதலிய குணங்கள் இல்வழி உயர்குடியிற் பிறந்ததனாற் பயனின்மையின், அக்குணங்களும், நிலத்தியல்பால் நீர்திரியுமாகலின், நல்லதன் நலனும், தீயதின் தீமையும் இல்லென்போரும், விடரும், தூர்த்தரும், நடரும், உள்ளிட்ட கூட்டங்களில் சேராது, காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமெனப்பட்ட மூவிரு குற்றமும் முறைமையிற்கடிந்து, தீநெறி விலக்கி நன்னெறிச் செலுத்தும், பேரறிவுடையாரைக் காவற்சாகாடு உகைத்தற்கண், தனக்கு உறுதுணையாகக்கொண்டு, அவர் கூறும் நல்லுரைகளை அவமதித்து ஒழுகாத ஒழுக்கமும், மனைவிழைவார் மாண்பயனெய்தார் * ஆகலின், இல்லாளை யஞ்சி விருந்தின் முகங்கொல்லா விரதமும், தந்நலத்தை, விலை கொடுப்பார் யாவர்க்கும் விற்பதல்லது, அதற்கு ஆவார், ஆகாதார் என்னும் வரைவிலாத மகளிரை மனத்தினும் தீண்டாஒழுக்கமும், கள்ளின்மேல்காதல் கொண்டு ஒழுகும் அரசன், பகைவரான் அஞ்சப்படான் ஆதலின், கள்ளைக் கனவிலும் கருதாக் கள்ளாமையும், தான் செய்துகொள்ளவேண்டிய அறமுதலியனவற்றையேயன்றி, தொன்றுதொட்டு வருகின்ற அவன் செல்வத்தையும், முன்செய்த நல்வினையின் பயனாய நற்குணங்களையும் போக்குவது சூதாகலின் †அதனைச் செய்யாமையும், ஒரு வினையைத்தொடங்குங்கால் பின்னர், எற்றென்று இரங்குவனவற்றைச் செய்யாது, பொருளை

---

*பல அரசர்களையும், புறங்காட்ட, ஓட்டிவென்று அரசாண்ட சச்சந்தன் தன் மனைவி விசயை பால் வைத்த அன்பினால், என்றும் அவள் பால் தங்க விரும்பி, அமைச்சர்கள் பலரும், தன்னைத் தடுப்பவும் கேளானாய், ''எனக்குயிரென்னப் பட்டான் என்னலாற் பிறரையில்லான், தனக்குயான் செய்வசெய்தேன் தான் செய்வ செய்க.'' என்று கூறி அரசைக் கட்டியங்காரன் பால் விடுத்து, மனைவியோடிருந்து, இன்பம் நுகர்ந்து, பின்னர், அவனால் கொல்லப்பட்டதை நினைவு கூருங்கள்.

†காமர் கயல் புரளுதலினால் காவி முகை நெகிழ்ந்தும், தாமரையின் செந்தேன் தளையவிழ்ந்தும் சிறப்புப் பெறும் நிடத நாட்டிற்குத் தலைவன்—நளன், சூதாடி, அரசு, மக்கள், மனைவி முதலியோரைவிட்டு நீங்கித் துன்புற்றது ஈண்டு உணரற்பாற்று.

யன்றி, அறமும், புகழும் பயப்பதாய வினைகளை, அவ் வினை வலி யையும், நல்ல காரியத்திற்கு நானூறு இடையூறு என்பவாகலின், அதனை விலக்கலுறும் மாற்றான் வலியையும், இருவர்க்கும் துணை யாவார் வலியையும் சீர்தூக்கிப்பார்த்து, தன்வலி மிக்குழி, அது இடரின்றி முடியும் காலத்தில், அது செய்தற்கேற்ற இடத்தில், ஊக்கத்தோடே தொடங்கி, செய்புழி, தெய்வத்தானுக, பொரு ளின்மையானுக, மெயவருத்தத்தானுகத், தனக்கு இடுக்கண் கள் பல அடுக்கிவரினும், தந்நிலையில் சிறிதும் தாழாது, அவ் வினை, தன்னுல் இசையாதெனினும், ஒராற்ருல் இயற்றும் வன்மையும், ஒரோவழி, தெய்வத்தான் தாழ்வு வந்துழி, மயிர் நீப்பின் உயிர் வாழாத கவரிமாவைப் போல, உயிர் வாழாத உயர்வும், முற்றத்துறந்த முனிவராயும், விரத வொழுக்கின ராயும் வேடம் பூண்டு, உள்புகுதற்கரிய இடங்களெல்லாம் உள் புக்கு, ஆராய வேண்டுவனவற்றை ஆராய்ந்தறிந்து, ஆண்டை யார் ஐயுற்றுப் பிடித்து, சாம, பேத, தான, தண்டங்கள் செய் யினும் தன்னை வெளிப்படுத்தாத ஒற்றரைப் பகை, நொதுமல், நட்பு என்னும் மூன்று திறத்தார் மாட்டும் நிகழ்ந்தன, நிகழ் வன அறிதற்குப் போக்கி, அவர் வந்தறிவித்த காரியந் தன்னை யும், மற்றும் ஓர் ஒற்றனுல் ஒற்றுவித்து ஒப்புமை கண்டு அதற்குத் தக நடக்கும் பேராற்றலும், போருக்குச் செல்லு தற்கு முன்னர், “ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும், பெண் டிரும், பிணியுடையீரும், பேணித் தென்புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும் பொன்போற் புதல்வர்ப்பெறூஅதீரும் எம் அம் புகடிவிடுதும் நும் அரண்சேர்மின்” என, பறையறைவித்துச் சென்று, “அறத்திஞலன்றி யமரார்க்கும் அருஞ்சமங் கடத்தல், மறத்திஞல் அரிதென்பதை மனத்திடை வலித்து,” அழியுநர் புறக்கொடை யயில்வேலோச்சாது போர்புரியும் சீரிய குண மும், புலவர் பாடும், புகழுடையோர், விசும்பில் வலவன் ஏவா வானவூர்தி யெய்துவராகலின், புலவரைப் புரக்கும் வண்மை யும் ஆகிய இன்னேரன்ன குணங்களையுடைய அரசன்,

மேற்கூறிய குணங்களையுடையவனும், குன்றக் கூறல் முதலிய குற்றங்கடிந்து, சுருங்கச் சொல்லல் முதலிய குணங்

களோடு கூடிய சொற்களைக் கூறவல்ல ஆற்றலும், அரசனுக்கு ஒன்று கூறுங்கால், அப்பொழுது நிகழ்கின்ற அவன் குறிப்பினை அறிந்து, சொல்லுதற்கேற்ற காலத்தையும் நோக்கி, வெறுப்பிலவுமாய், வேண்டுவனவுமாய காரியங்களை, அவன் மனம் விரும்பும்வகை, சொல்லும் வன்மையும், அரசர் கருதிய தனை அவர் கூறுமுன்பே, குறிப்பானறிதலும் ஆய இன்னோரன்ன குணங்களையுடைய அமைச்சனையும்,

அமைச்சனுதற்கேற்ற குடியின்கண் பிறந்தவனும், வேந்தன் விரும்பும் பண்புடையவனும், இயற்கை யறிவும், கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும், பலகாலும், பலரோடும், ஆராயப்பட்ட கல்வியும் உடையவனும், தான் சென்ற கருமத்தைப் பகைவேந்தர் மனங்கொளச் சொல்லி அவர் செயிர்த்து நோக்கின், அந்நோக்கிற்கு அஞ்சாது, தன் அரசனுக்கு நன்மை பயப்பிப்பவனும் ஆய தூதனையும்,

தள்ளா விளையுள், திருவினர், தக்கோர் சாலச்செறிந்ததும், பெரும் பொருளுடைமைபாற் பிறரால் விரும்பத் தக்கதும், பிற நாட்டினர் எல்லாம் ஒருங்கே தன்கண் வருங்கால் தாங்கி, வேந்தர்க்கு இறை உய்க்கும் நலத்ததும், பல்குழு, வேந்தலைக் கும் படர் கொலைக் குறும்பு, தீயபல்கும் உட்பகை, உடற்றும் பகை, உறுபசி, தீராநோய் ஆகிய இவை புல்குறிதானும் இல்லாததும், பொங்கிய செல்வம், ஏமம், பிணியின்மை, இன்பம், விளைவு முதலியவற்றை அணியாக வுடையதும், வருபுனல், வாய்ந்த வோங்கல், வல்லரண், மேல்நீர், கீழ்நீர் என்னும் பல் லுறுப்பினையுடையதும் ஆய நாட்டினையும்,

நீர் அரண், நில அரண், மலை அரண், காட்டரண் என்ற நால்வகை அரண்களையும், ஏணிக்கெட்டா உயர்வும், புறத்தோரால் அகழலாகா அடி அகலமும்; அகத்தோர்க்கு நின்று வினை செய்யலாம் தலையகலும், கல் இட்டிகளாற் செய்யப் பெற்று குத்தப்படாத் திண்மையும், வளைந்து தானே எய்யும் எந்திர வில்லும், சேர்ந்தாரைக் கடிக்கும் கரிய விரல்களையுடைய குரங்கும், கல்லுமிழ்கவணும், கல்லிடு கூடையும், கிடங்கு நீங்கி மதிற் பற்றுவாரைக் கோத்து வலிக்கும் தூண்டிலும், கழுத்திற் பூட்டி

முறுக்கும் சங்கிலியும், உச்சியைக் கொத்தி மூளையைக் கடிக்கும் ஆண்டலைப்புள்ளும், கிடங்கிலேறின், மறியத்தள்ளும் இருப்புக் கடையும், கண்ணைக் கொத்தும் சிச்சிலியும், மதிற்றலை யேறினார் உடலைக் கோட்டாற் கிழிக்கும் பன்றியும், கதவுக்கு வலியாக உள் வாயிற்படியில் நிலத்திலே வீழ விடும் மரங்களும், கணைய மரமுமாகிய பொறிகளையுடைமையான் அணுகுதற்கு அருமையும் உடைய மதில்களையும், உட்கொண்ட பலவகை யுணவுகளையும் உடைய அரண்களையும்,

ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் பொருளாக மதிக்குமாறு செய்வதும், அறத்தையும், இன்பத்தையும் தருவதும், உடையாரின்மையால் தானே வந்துற்றதும், கலத்தினும், காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயதும், பகைவர்பால் திறையாகக் கொண்டதும் ஆகிய பொருளையும்,

யானை முதலாய நான்குறுப்பாலும் நிறைந்து போரின்கண் ஊறுபடுதற்கு அஞ்சாததும், அழியுநர் புறக்கொடை அயில்வேலோச்சாத் தலைவகையுடையதும் ஆயபடையையும்,

அவையிடை, ஆடைகுலைந்தான் ஒருவனுக்கு அப்பொழுதே அவன் கைசென்று அவ்விளிவரலைக் களையுமாறு போல, தனக்கு இடுக்கண் வந்துழி அப்பொழுதே சென்று உதவி அதனைக்களைபவனும், தான், பழியும், பாவமும், தரும் செய்கையைச் செய்ய முயலுழி, அது செய்தற்கு முன்னரே மேற்சென்று, செவிகைக்கும் சொற்களைக் கூறியேனும் திருத்துபவனும் ஆய நண்பரையும்,

தனக்கு உறுதுணையாகக் கொண்டு, முறைவேண்டினார்க்கும், குறை வேண்டினார்க்கும் பேரத்தாணிக்கண், சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியுடையனாய், யாவர் மாட்டுங் கடுஞ்சொல்லன் அல்லனுமாய், தன் கீழ்வாழ்வார் குற்றம் செய்யின், அக்குற்றத்தை நாடி, செய்தார், உயிரினும் சிறந்தாராயினும் அவர் மாட்டுங் கண்ணோடாது, நடுநிலைமையோடு, அக்குற்றத்திற்குத் தக்க தண்டத்தை நூலோரோடுங் கூடி ஆராய்ந்து அவ்வளவிற்றாகச் செய்து ஆளும் ஆட்சி செங்கோன்மை யெனப்பெறும்.

# முதலாம் இராசராசன் அமைத்த திருக்கோயில்.

திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
*தஞ்சை அரசர் திருக்கோயில் கண்காணிப்பாளர்.*

இராசராசன் கி. பி. 985 முதல் 1014 வரை இருபத்தொன்பது ஆண்டு வெகு கீர்த்தியுடன் சோழர் பேரரசைத் தாங்கினான். தன் பாட்டன் பராந்தகனைப் போலத் தில்லைச்சிற்றம்பலத்திற்கு நிபந்தங்கள் பல இயற்றி வழிபட்டமையின் தில்லை வாழந்தணர் இவனது ஆட்சியின் பத்தொன்பதாவது ஆண்டில் "இராசராசன்', 'சிவபாத சேகரன்" என்னும் பட்டங்களைக் கொடுத்தார்களெனக் கல்வெட்டறிஞர் வெங்கய்யா கூறுகின்றார். அருண்மொழிவர்மன் என்பது அவனது இயற்பெயர். இராசராசன் என்பது சிவநண்பனும், செல்வத்திற் சிறந்தோனுமாகிய குபேரனுக்குரிய பெயர்களுள் ஒன்று. இத்தகைய அருமையான பெயர்கள் கிடைத்த பின்னரும், தனது வெற்றியும், புகழும் எங்கும் நிலவிட, நாடுமுழுதும் அமைதியாக இருந்தமையின் தன் எண்ணத்தைக் கடவுட் டிருப்பணியில் செலுத்தி, தனது புதுப்பெயரால் கோயில் எடுக்கும் எண்ணம் இயற்கையாக உண்டாகி அவனது பத்தொன்பதாவது ஆண்டாகிய கி. பி. 1003-ல் கோயில் கட்ட ஆரம்பித்திருத்தல் வேண்டும். இவன் மேலைச்சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயனை வென்றதற்காகப் பொற்பூக்கள் பல இவ்வாலயத்துப் பரமசுவாமிக்குக் கொடுத்ததாக, "ஸத்யாசரயனை எறிந்து எழுந்தருளிவந்து ஸ்ரீ பாதபுஷ்பமாக அட்டித் திருவடி தொழுதன திருப்பொற்பூ" என்பதனால் தெரிகின்றது. அவ்வெற்றி இவனது 22-ம் ஆண்டில் ஏற்பட்டதாகும். அவ்வாண்டினில் பொற்பூவால் அர்ச்சிப்பானாயின் இவ்விமானவேலை ஒருவாறு முடிந்திருத்தல் வேண்டும். யாண்டு 23 முதல் 27 வரையில் பொற்சின்னங்களும் பொன்னாபரணங்களும் கொடுத்

---

(1) "The Tamil races were perhaps the greatest temple builders in the world; the great pagoda at Tanjore......by far the grandest temple in India......Architecture. Encyclopaedia Brittanica 9th Edition II. P. 396.

ததாகச் சாசனம் கூறுகின்றது. இதனுல் இருபத்துமூன்ரும் யாண்டில் இக்கோயில் திருப்பணி பெரும்பாலும் முடிந்தும், "யாண்டு இருபத்தைஞ்சாவது நாள் இருநூற்றெழுபத்தைஞ்சினுல் உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் ஸ்ரீ ராஜராஜீச்வரமுடையார் ஸ்ரீ விமானத்துச் செம்பின் ஸ்தூபித் தறியில் வைக்கக் கொடுத்த செப்புக்குடம் கொடுத்துத் திருப்பணி முடிவுற்றுக் கும்பாபிஷேகம் நடந்தும், இக்கோயில் விமானத்தில் "யாண்டு இருபத்தாருவது நாள் இருபதினுல் உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் ஸ்ரீ விமானக் கல்லில் வெட்டுக" எனச்சாசனம் வெட்டுதற்கு இவன் கட்டளை இட்டிருப்பதும் காணும்போது இவனது பத்தொன்பதாவது (கி.பி. 1003) யாண்டில் தொடங்கி, யாண்டு இருபத்தைந்தில் அதாவது கி. பி. 1009-ல் இத்திருப்பணி முடிவுற்ற தென்னலாம்.

இக்கோயில் எடுத்துள்ள இடம் தமது நாட்டின் பெரும் பகுதியான "பாண்டிய குலாசனிவளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீ ராஜ ராஜீச்வரம்' எனச் சாசனத்தில் காணப்படுதலின் இப்பெரிய கோயிலுக்குப் பெயர் இராஜராஜீச்வரம் என்பதும், இது ஒரு கற்கோயில் என்பதும் பாண்டிய குலாசனி என்பது இராச ராசனின் விருதுப் பெயர்களில் ஒன்று என்பதும் இதற்குப் பாண்டியகுலத்திற்கு இடியேற்றை ஒப்பவன் என்பது பொருளென்பதும் விளங்கும். இவ்வாலயத்திற்கு மூன்று திருவாயில்கள் இருக்கின்றன. அவை முதற்கோபுரவாசலாகிய, "கேரளாந்தகன்" (சேரர்களுக்குயமன்) என்பது. மற்றது இரண்டாவது கோபுரமாகிய, "இராசராசன் திருவாசல்" என்ற பெயருடையது. மூன்ருவது, கோயில் உள்வாயிலாகிய, "அணுக்கன் திருவாசல்" ஆகும். விமானத்தின் தெற்கு வாசலுக்கு "விக்ரமன் திருவாசல்" எனப்பிற்காலத்தில் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இறைவன் சந்நிதியை அணுக இவ்விமானத்தில் வடக்குவாயில் ஒன்றும் உள்ளது. ஒவ்வொன்றும் படிகளால் எய்துபவையாம். கம்பீரத் தோற்றமுள்ள துவார பாலர் இவ்வாயில்களிற் காப்புச் செய்கின்றனர். தெற்குவாயிலின் கீழ்ப்பாகத்து மகாலக்ஷமியின் உருவமும் வடக்குவாயிலின் கீழ்ப்பாகத்து சரசுவதியின் வடிவமும் வனப்புறத் திகழ்கின்றன. திரு அணுக்கன் திருவாயில் இருபுறமுமமைந்த படிகளால் (transverse steps) எய்துவதாகும். இப்படிகளே கோயில் எடுப்பித்தபோது உடன் உண்டானவை. இக்கா

ரணம் கொண்டு இக்கோயில் மாடக் கோயில் என்பதற்கேற்ற இலக்கணம் பெற்றதென்பர். திருவாயிலுக்கு எதிரே இப்போது அமைத்துள்ள நேரானபடிகள் பிற்காலத்தில் ஏற்பட்டவையாகும். கோயிலின் நீட்டளவு 793 அடி. குறுக்களவு 397 அடி.

கோயிலின் கர்ப்பகிருகத்திற்கு மேலேயுள்ள அழகிய விமானம் சதுரவடிவமாயும், கோபுரமாடிகள் பதின்மூன்று உள்ளனவாயும், உச்சியில் சதுரவடிவமுள்ள பிரமரந்திரத்தளக் கல்லின் மேலுள்ள கலசமும் அதன்மேல் அழகிய ஸ்தூபி ஒன்றும் அமைக்கப்பெற்றுள்ளது. இச்சிறந்த விமானம் தக்ஷணமேரு என்னும் உத்தம விமானம் என்றும் வழங்கப்படுகிறது. 216 அடி உயரமிடையது. இதன் ஸ்தூபிக்குடம் செம்பினுற் செய்யப்பட்டு மேலே பொற்றகடு போர்த்ததாகும். செப்புக்குடம் 3083 பலம் நிறையுடையது. அதன்மேல் போர்த்துள்ள பொற்றகடு 2926½ கழஞ்சு. விமான உச்சியில் போடப்பட்ட பிரமரந்திரத்தளம் ஓரே கருங்கல். அது 25½ அடி சதுரம். நிறை 80 டன் என்பர். இதனைத் தஞ்சைக்கு நான்கு மைலுக்கப்பாலுள்ள சாரப்பள்ளம் என்ற கிராமத்தி லிருந்து சாரம் போட்டு இச்சிகரத்தில் ஏற்றினுர்களென்பது கிராமத்துப் பெயரால் ஊகிக்கப்படுகிறது. சதுரக்கல்லின் நான்குமூலைகளிலும் முறையே இரண்டு நந்திகள் உள்ளன. அவை தனித்தனி 6½ அடி நீளம் 5½ அடி அகலம் உள்ளன. இதனையொத்த நந்தியொன்று உமாபாமேச்வரியின் சந்நிதிக்கு எதிரே திருச்சுற்று மாளிகையில் இருப்பதைக் காணலாம். பிரமரந்திரத் தளக்கல்லைப்பற்றிப் பல கதைகளுண்டு. விமான வேலை நடத்துப்போது சிற்பிகளுக்கு உணவு, நீர் முதலியன கொடுத்துதவிய ஒரு முதியாளிடம் தங்கள் நன்றியைக் காட்டு தற்கு அறிகுறியாக அச்சிற்பிகள் அம்முதியாள் விருப்பியபடி அவள் வீட்டிலிருந்த கல்லொன்றை விமானத்தின் சிகரத்தின் நடுவில் அமைத்துக் கோயிலைக் கட்டி நிறைவேற்றினுர்களென வும், ஒருநாள் சோழனது கனவில் பெருவுடையார், "யாம் கிழவி அளித்த நிழலில் உவந்திருக்கின்றேம்," எனத்திருவாய் மலர்ந்தருள, சோழன் உண்மையறியாது மயங்கிப் பின்னர் அறிந்தனனென்பதும் ஒன்று. இது பிரகதீசுவர மகாத்மியத் திற் கண்டது. இதனை மகாவித்வான் மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள், "அம்மையார் நிழலில்யா மமர்வோமென் றருள் செய்த, செம்மையார் வீற்றிருக்குந் திருத்தஞ்சை" என

மாயூரப் புராணத்திலும், "தஞ்சைப் பெருவுடையாருலா" ஆசிரியர், "பொன்னி

நதியுடைக்கோன் முன்னோர் நரை முதியாணிழல்
வதிகின்றேமென்ன வந்தான் வந்தான்" —70

எனவும் கூறியுள்ளார்கள். இதனை மீண்டும் நிரூபிக்க தஞ்சை நாட்டாண்மைக் கழக பனகால் கட்டிடத்திற் கருகிலுள்ள அழகிக்குளம், அழகித்தோட்டம், என்ற இடங்களானவை இம்முதியளாகிய அழகி என்பாளுக்குச் சோழ அரசனால் கொடுக்கப்பட்ட இடங்களென்றும் அவை சமீபகாலம்வரை சர்க்கார் பைமாஷ் கணக்குகளிலும் அப்பெயராலேயே வழங்கிவந்தனவென்பதும் பெறுதும். ஒரு இடைச்சி இக்கோயில் விமானத்திற்குதவிய இக்கல்லின் நிமித்தமாக இராஜராஜன் அவள் பக்தியை வியந்து அவள் ஊரில் ஒரு கோயிலைக் கட்டுவித்தான் எனவும் அவ்வூர் அப்போது "இராசராசேசுரம்" என்று அழைக்கப்பெற்று, பிற்காலத்து மருவி தாராசுரம் என்பதாயிற்றென்பதும் மற்றொன்று.

இராசராசனுடைய அளவு கடந்த சைவப்பற்றும் விசாலமான மதநோக்கமும் இப்பெரிய கோயில் விமானங்களிலும், மற்றும் பல பாகங்களிலும் மலிந்து கிடக்கும் சைவவைணவ புராண சம்பந்தமான சிலைகள், சிற்பங்கள் ஆகிய இவற்றால் அறிவுறுத்தப் பெறுகின்றன. திருக்கோயிலின் நாற்புறமும் உயர்ந்த மதில்களின்மேலிருந்து விழுந்தும், பிறர் எடுத்துப் போனதும்போக எஞ்சிநின்ற 343 நந்தி உருவங்களும் இதனையே வலிவுறுத்துவன. கோயில் விமானத்தின் தென்புறமதில் பக்கத்தில் சோழவீரர்களுடைய உருவங்களும், பிள்ளையார், திருமால் பிச்சாடனர், சூலதேவர், தக்ஷிணாமூர்த்தி, மார்க்கண்டேயர், நடராசர் சிலைகளும், மேல் பக்கத்தில் லிங்கோத்பவ அர்த்தநாரீசுவரரும், வடபாகத்தில் கங்காதரர், கலியாணசுந்தரர், மகிடாசூரமர்த்தனி படிமங்களும் வனப்புடன் உள்ளன. மற்றும், திருச்சுற்றுமாளிகையின் தென்பாகந் தவிர மற்ற பாகங்களில் மகாலிங்கங்கள், நாககன்னிகை முதலியவைகள் பிரதிட்டித்தும், அஷ்டதிக்குப் பாலகர்களுக்குத் தனித்தனி ஆலயங்கள் எடுப்பித்து மிருப்பதும் காணலாகும். மற்றும் கோயிலின் தெற்கு விக்கிரமன் திருவாயிலின் கீழ் பாகத்தில் பௌத்த சிலைகள் சில காணப்படுகின்றன. இராசராசனது சில கல்வெட்டுகளால் கடக விஷயதேசத்து அரசனை

விஜயோத்துங்க வர்மனால் நாகையில் எடுக்கப்பட்ட சூடாமணி விகாரா எனப்பட்ட பௌத்தப் பள்ளிக்குப் பல நில தானங்கள் செய்தமையும், ஜைனர்களுக்கும், பௌத்தர்களுக்கும் ஒரே விதமாகப் பல நிலதானங்களை இறையிலிபாகத் தந்தமையும்காணக் கிடக்கின்றன. வடகோபுரத்தின் கீழ்பாகத்தில் மற்றைய உருவச்சிலைகளுடன் சிரசளவில் ஒரு ஐரோப்பியனுடைய உருவமொன்றும் காணப்படுகின்றது. அதற்குப் பல அபிப்பிராயங்கள் சொல்லப்படுகின்றன.

விமானத்தை நிருபணஞ்செய்த சிற்பி, இச் சோழ தேசத்தை முன்னும் பின்னுமாக அரசாளும் வர்க்கத்தாரை மேற்காட்டிய உருவங்களாற் குறிப்பிட்டிருக்கின்றானென்பர். அன்றியும் பலகோயில்களை நிருபணஞ்செய்த நாயக்கர் பரம்பரையில், பதினேழாவது நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த அரசனொருவனுக்கு நண்பனும் உதவியுமாக இருந்த டென்மார்க் தேசத்தான் Roeland Crape என்பது மற்றொன்று. இச்சிலையானது மற்றும் தென்னிந்தியாவில் பதின்மூன்றாம் நூற்றாண்டில் சிறப்புவாய்ந்த மார்க்கோ போலோ (Marco Polo) என்ற வெனிஸ் பிரபல பிரயாணியின் உருவமென்பர் மற்றொரு சாரார். எப்படியாயினும் அதன் உண்மை சரிவரத் தெரிந்திலது.

கோயிற்றிருப்பணி முடிந்து அருள் திருமேனியாகிய சிவலிங்கத்தினைக் கோயிலில் எழுந்தருளச்செய்து ஆதிசைவரைக் கொண்டு மருந்துசாத்திப் பந்தனம் செய்வித்தபொழுது, ஆவுடையார் வடிவம் பெரியதாயிருந்தமையின், மருந்திளகிப் பந்தனமாகாமற் போயிற்று. அதுகண்டு இராசராசன் வருந்தி நிற்கையில் "கருவூர்த்தேவர் ஈண்டுவரின் நீ எண்ணிய எண்ணம் கைவரும்" என விண்ணிடை நின்றும் ஒருநன்மொழி எழுந்தது. அதைக்கேட்ட அரசன் கவலை நீங்கி அப்பெரியார் யார்? அவரது வருகை எனக்கு எவ்வாறு கிடைக்கும்? என அங்கிருந்தாரை உசாவிய போது, தம் உருமாறி அவ்விடத்திருந்த போகநாதரென்னும் யோகியார், 'அரச! கவலற்க; கருவூர்த்தேவரை இங்கு வரவழைப்போம்' என்றுரைத்திட்டு ஓலை எழுதித் தம் தவவன்மையால் அதனைக் காக்கையின் காலிற் கட்டி விடுத்தனர். அவ்வோலையைக் கண்ணுற்ற கருவூர்த் தேவர், அக்கணமே பொதிகையினின்றும் புறப்பட்டுத் தஞ்சையை அடைந்து, போக நாதரது ஆணைபெற்றுக் கோயிலுட் புகுந்து, சிவலிங்கத்தை ஆவுடையாருடன் சேர்த்துச் செவ்வே

நிறுத்தித் தம் வாயிற்றம்பலத்தை மருந்தாக உபயோகித்து இறுகப்பிடித்திட, பொன்னை உருக்கி வார்த்ததுபோலப்பந்தன் மாயிற்று. அப்போது அரசனும் யாவரும் 'அன்பர்தம் செய்கையை யாரே அறிகுவர்' என ஆச்சரியமெய்தி மகிழ்ந்த னர் என்பது.*

தஞ்சை இராசராசேச்சுரத்தில் எழுந்தருளிய சுவாமிக் குப் பெயர் இராஜராஜீச்வரமுடையார் என இராசராசன் அழைத்தான். கல்வெட்டுகள் முழுதுமே, அவ்வாறு கூறுகின் றன. இக்கோயில் விமானம் தக்ஷிணமேரு என முற்கூறப் பட்டது. இதில் எழுந்தருளியிருக்கின்றவருக்குத் தக்ஷிண மேருவிடங்கர், ஆடவல்லான் எனவும் பெயர்கள் வழங்கின. அக்காலத்தில் சைவமத உணர்ச்சி சிதம்பரம் கோயில் பற்றி எழுந்தமையாலும் தில்லை நடராசருக்கு ஆடவல்லான் என்பது ஒரு பெயராதலாலும் இக்காரணங்கள் பற்றியே இப்பெரு மானுக்கும் அப்பெயரிட்டனன் என்பர். சிவமுகூர்த்தங்கள் பல காணப்படினும் அம்மையின் பெயரெல்லாம் வெவ்வேருக இல்லாமல் "உமாபரமேச்வரி" என ஒன்ருக இருக்கின்றது. பிற்காலத்தில் இக்கோயில் கொண்ட இறைவனுக்குத் திரு நாமம்பெருவுடையார் எனவும், இறைவிக்குப் பெரியநாயகி எனவும் அவை வடமொழியில் பிரகதீச்வரர், பிருகந்நாயகி எனவும் வழங்கிவருகிறது.† ஸ்ரீ பெருவுடையார் அருட்டிரு மேனி இலிங்கசொரூபமானது நருமதை நதி தீரத்திலிருந்து இங்கு இராச ராசனுல் கொணரப்பட்டதென்பர். அதற்கு அமைந்த மகாத்மிய ஆதாரமும், சைத்ரவிழா, அஷ்டகொடி யன்று இராச ராசன் தஞ்சை அறுபத்துநான்குமனை வேளாஞ் செட்டிமார்களை அழைப்பித்துச் சிறப்பிக்கும் சம்பிரதாயமும் குறிப்பிடற்பாலன.

---

*இவ்வரலாறு கருவூர்ப்புராணம், கருவூர்த்தேவர் கதிபெறு சருக் கத்துக் காணப்படுகிறது. இதன் உண்மை ஆறிதற்பாலது. இந்நிகழ்ச்சி வாய்ந்திருப்பின் இராச ராசன் அதனைத் தம் கல்வெட்டுகளில் கூருது இருத்தல் அமையாது.

†சிற்றம்பலத்திற்கு சிதம்பரம் என்றும் குடுமிநாதருக்கு சிகாநாதர் என்றும், பெத்தாரண்ணன் என்னும் தெய்வப்பெயரை ஆபத் உத்தா ரணன் என்றும், திருமறைக்காட்டை வேதாரண்ணியம் என்றும், மயிலாடு துறையை மயூரமென்றும், குரங்காடுதுறையை கபிஸ்தலம் என்றும், தூய தென்மொழிப் பெயர்களையெல்லாம் வடமொழிப் பெயராக மொழி பெயர்த்து வந்தமை அறியலாம்,

இக்கோயிலில் சிவமுகூர்த்தங்களேயல்லாமல் விஷ்ணு திருமேனியும், நம்பி ஆரூரர், நங்கைபரவையார், திருநாவுக்கரையர், திருஞானசம்பந்த அடிகள், சிறுத்தொண்டர், சண்டேசுவரர் முதலிய அடியார் திருமேனிகளும், இராசராசன், அவன் பட்டத்தரசி லோகமாதேவியார் படிமங்களும் பிரதிட்டை செய்விக்கப்பட்டிருக்கின்றன.

இராசராசன் இப்பெரிய கோயிலுக்கென்று ஏற்படுத்திய நிபந்தங்கள் மிகப்பலவாம். கோயிலுக்கு வேண்டிய வசதிகள் ஒன்றினையும் குறைவுபடாது செய்வதையே அப்பெருமான் தனது வாழ்வின் பயனாகக் கொண்டான். தான் புரிந்த போர்களில் வென்றுகொணர்ந்த சொத்துக்கள் யாவற்றையும் அக்கோயிலுக்கே அளித்தனன். நானாவித ஆபரணங்களும், பாத்திரங்களும், நெல்விளையும் கிராமங்கள் பலவும், தினவிதிகளுக்கும், விழாக்களுக்கும் வேண்டிய அளவு பொன்னும், பொருளும், கடவுட்குச் சூட்ட நறுமலரும் நாடோறும் பெறத்தந்துவந்ததோடு தீபங்களுக்கு நாடோறும் விளக்கு ஒன்றினுக்கு உழக்கு விழுக்காடு, நெய் அளப்பதற்கு ஆடு, பசு, எருமை என்ற மூவினமும் இடையர்கள் பெறத்தந்து என்றும், யாவும், மிகவும் தாராளமாகத் தரும்படி வரும்படியமைத்துத் திருப்பணியை நிலைபெறச்செய்தான்.

இக்கோயில் சிறுகாலை, உச்சம்போது, இரவை என்ற மூன்று காலத்தும் பூசை நடைபெற்றது. "ஸ்ரீராஜராஜீச்வரமுடையார் ஆடியருளும் திருமஞ்சன நீரிலும் தண்ணீர் மீதிலும் இட பெருஞ் சண்பக மொட்டுக்கும், ஏலவரிசிக்கும், இலாமச்சத்திற்கும்" என்னும் சாசனப்பகுதியால், "பெருஞ்சண்பக மொட்டு, ஏலவரிசி, இலாமச்சம் ஆகிய இவைகளை ஊறவைத்த நீரால் திருமஞ்சனம் ஆட்டினமை அறியலாம். பழவரிசியாற் சமைத்த போனகம், நெய்யமுது, தயிரமுது, நாடோறும் திருவமுது, அடைக்காயமுது, கறியமுது, பருப்பமுது, வெள்ளிலையமுதுடனும், திருவிழாக்காலங்களில் பருப்பி, பழவரிசி, மிளகு, சீரகம், சர்க்கரை, கடுகு, நெய் என்ற இவையோடு செய்த அப்பக்காய்கறியமுதும், பொரிக்கறியமுதும் மிளகு, சீரகம், சர்க்கரை, கொள்ளு, வாழைப்பழம், புளி, தயிர், நெய், கடுகு இவை கொண்ட புளியங்கறியமுதும், புளியிட்டடுங்கறியமுதும் நிவேதிக்கப்பட்டன. அச்சமயத்தில் நாற்பத்தெண்மர் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய, ஆரியமும் தமிழும் பாடுபவர்

பாட, கனபாடிகள் சாமகானம் செய்திட, மத்தளம், பக்கவாத்தியம், வீணைகளுடன் காந்தர்விகள் இன்னிசைபாடி நடனம் செய்தனர். மொரலியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச் சங்கம், உவச்சுப்பறை சகடை முதலிய இயங்கள் முழங்கின. நெய்கொண்டு திருவிளக்குகள் எண்ணிறந்தன எரிந்தன.

இராஜராஜீச்வரமுடையாருக்கு இராசராசசோழதேவரால் வைரம், வைடூரியம், கோமேதகம், முத்துமுதலிய நவரத்தினங்களாலாகிய ஆபரணங்கள், பொன், வெள்ளியாலாகிய பாண்டங்கள்பல, பொன்னாற்செய்து 'சிவபாதசேகரன்' என்றும், ராஜராஜன் என்றும் செதுக்கிய காளங்கள், திருப்பள்ளித் தொங்கல் மகுடம், தவளச்சத்திரமகுடம், வண்ணிகைத் திருக்கொற்றக்குடைமகுடம், ஈச்சோப்பிகை, வெண்சாமரக்கை, காளாஞ்சி முதலிய திருச்சின்னங்களும், ஸ்ரீமுடி, வீரபட்டம், திருஉதரபந்தனம், திருவடிக்காறை, திருப்பட்டிகை, சப்தசரி, பஞ்சசரி, திருக்குதம்பை, தோடு, ராஜாவர்த்தம், திரள்மணிவடம், தாலிமணிவடம், ஸ்ரீசந்தம், முதலிய பொன்னாபரணங்களும், வடுகவாளி, முத்துமாத்திரை, பஞ்சசரி, ஏகாவல்லி, முத்தின் சூடகம், திருக்கால்வடம் முதலிய முத்தாபரணங்களும், கண்டநாண், புல்லிகைக்கண்டநாண், பாசபாலை, மாணிக்கத்தின் தாலி, ஸ்ரீவாகுவலயம், பதக்கம், ரத்னவளையல், ரத்னகடகம், ரத்னமோதிரம், நவரத்னமோதிரம், பிருஷ்டகண்டிகை முதலிய ரத்னாபரணங்களும், பொன்னாலும் வெள்ளியாலும் செய்த ஒட்டுவெட்டில், கலசம், குடம், தட்டம், குறுமடல், கிடாரம் முதலிய பரிகலங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.[1]

---

[1] S. I. I. Vol. II. ii. pp. 203—217 also Ins. 69 of 1888 சோழர்காலத்து அணிகலன்களின் அட்டவணை என விரிவாகக் காணலாம். ஆபரணங்களைக் கூறுமிடத்து அரக்குசெப்பாணி, சாடுகளை நீக்கி, பொன்னை நிறையெடுத்து, அவற்றில் நவமணிகள் பதிப்பிக்கப்பெற்றிருப்பின் அவை இத்துணை, இவ்வளவுநிறையுடையன, இன்னின்ன தன்மையுடையன என்றுரைத்து விலை இத்தனை காசு என்றும் கண்டிருப்பது மெச்சத் தகுந்தது. இரத்தினங்களைக் குறிக்குமிடத்து, பொறிவு, முறிவு, காகபிந்து, ரத்தபிந்து என்ற இவ்விதங்களிலெல்லாம் அவை குறைவுபட்டன என்றும் காணக்கிடக்கின்றது. ஒருவித ஆபரணம் "சோனகச்சிடுக்கின்கூடு" என்றிருத்தலால், சோனகன் என்றபதம் அக்காலத்தில் கிரேக்கர்களையும் அராபியர்களையுமே குறித்திருப்பதின் காரணமாக 11-வது நூற்றாண்டிலேயே, யவனர், அராபியர் முதலிய அன்னியர் சோழதேசத்திற்கு வந்தமையும் குறிக்கின்றது.

கோயில் காரியம் பார்ப்பவரை ஸ்ரீ காரியம்பார்ப்பவர் எனவும், அவரைக் கண்காணிப்பவரை ஸ்ரீ காரியக்கண்காணி நாயகம் எனவும் அக்காலத்தில் அழைத்தனர். திருமுன்னர் தேவாரத்திருமுறைகளை விண்ணப்பஞ் செய்வதற்காக இசைத் தமிழில் வல்லார் நாற்பத்தெண்மர், உடுக்கைவாசிப்பான் ஒருவன், கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனுடன் ஐம்பதின்மர் இருந்தனர். இவர்களையன்றி கனபாடி, ஆரியம் பாடுவார், தமிழிசை பாடுநரும் இருந்தனர். இராசராசன் பாடலினும் ஆடலினும் மிக்க ஆர்வமுடையவன். இராசவித்யாதரன் எனப் பெயரும் அவனுக்குண்டு. இவ்வாலயத்துக்குரிய பணிகளைக் குறைவின்றிச் செய்யவும், நடனம் புரியவும், சோழநாட்டுப்பிற கொயில்களினின்றும் குடியேற்றம்பெற்ற பதியிலார் நானூறு பேர்களைக்கொணர்ந்து இராஜராஜீச்வரத்தை அடுத்து வட புறத்தினும் தென்புறத்தினும் இவர்கட்காகத் தனித்தனிமனைகள் கட்டிக்கொடுத்தும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலி நிலமும், தந்து அவர்களைக் கோவிற்பணியிற் புகுத்தியாதரித்தார்கள். அவர்களுள் ஆடல் பாடல்களில் தேர்ச்சியுள்ளார் பலர் இருந்தனர். அவர்களுள் பாடுவோர் காந்தர்விகள் எனவும், அவர்களுக்குப் பாடங் கற்பித்தவர் காந்தர்வர் எனவும் அழைக்கப்பட்டனர். பின்னவர் எழுபத்தைவராவர். மற்றும் கொட்டி மத்தளக்காரர், பக்கவாத்தியர், வீணைவாசிப்பவர், மொரவியம், வங்கியம், பாடவியம், உடுக்கை, முத்திரைச் சங்கு முதலிய இசைக்கருவி முழக்குவோரும் பலர் இருந்தனர். உவச்சுப்பறை, சகடை, கரடிகை என்னும் பறை, விசேடங்களுமிருந்தன. மற்றும் இக்கோயிலில் பண்டாரிகள் (பொக்கிஷதார்), கணக்கர், மெய்காப்பார், பரிசாரகம் செய்பவர், திருவிளக்கிடுவார், திருப்பள்ளி தொங்கல்பிடிப்பவர் (மாலை கட்டுவோர்), வண்ணமிடுவார் (கோலமிடுவார்), சோதிடர், தச்சன், தட்டான், கன்னான், குயவன், தய்யான் (தையற்காரர்), அம்பட்டன், வண்ணான் முதலியோர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்களுக்குப் பரம்பரையாக வேலை கொடுக்கப்பட்டுவந்தது. இவர்கள் யாவரும் சம்பளமாகப் பெறுவது நெல்லாகும்.

உ

# தமிழ்ச் செய்திகள்.

## திருவாளர். தமிழ்ப்புலவர்.
## மறைதிருநாவுக்கரசர் சிறைபுகுந்தார் :—

தமிழ் மக்களின் பிறப்புரிமையாகிய தமிழ்மொழி, தமிழ் நாகரிகம் இவற்றிற்குக் கேடு சூழத்தலைப்பட்டிருக்கும் அரசியலாரின் கொடுங்கோன்மையே இதன் காரணம். வயிற்றுப் பிழைப்பைக் காத்துக்கொள்ளுதற்பொருட்டு, இப்புலவர் தனது பேச்சுரிமையை இழந்து வாழ ஒருப்பட்டாரில்லை; உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசி, மானமிழந்து, மதியிழந்து போலியான வாழ்க்கையில் உழலும் இழிசனரைப்போல் காலங் கழிக்கக் கருதினாரில்லை.

அரசியல் ஆட்சியில் அகப்பட்டிருக்கும் கலாசாலைகளில் தமிழாசிரியராயிருப்போரின் கடமை, மாணவர்க்குக் கல்வி பயிற்றுதல் என்பதோடமையாது, அரசியற்றலைவர்களின் வேடங்களை இவர்களும் புனையவேண்டுமெனவும், அத்தலைவர்களின் ஆடல் பாடல்களுக்கிணங்க இவ்வாசிரியர்களும் ஒத்து ஊதவேண்டும் எனவும் அயல்மொழிப் படிப்பால் மாணவர்களின் கல்வி நிரம்பாதெனவும், தாய்மொழிக் கல்வியே இன்றியமையாது பேணி வளர்க்கப்படவேண்டுமென எண்ணவும் பேசவுங்கூடாதெனவும் தலைவர்கள் வன்கண்மையால் வலியுறுத்தும் அரசியல் பிழைத்த கட்டளைகள், எங்ஙனம் அறிவும் ஆண்மையுமுள்ள நன்மக்களைக் கட்டுப்படுத்தும்?

இன்னாசெய்யாமை (அகிம்சை), உண்மைகடைப்பிடித்தல் (சத்தியாக்கிரகம்) பேச்சுரிமை, செயலுரிமை (Freedom of speech and action) தன்னுரிமை (சுதந்தரம்) ஆகியவற்றைத் தோற்றுவித்து அவற்றையும் பேணுவார்போல விளம்பரப் படுத்தி முற்றும் முரணான அடக்குமுறைகளைக் கையாண்டு மக்களை அடிமை வாழ்வில் தாழ்த்தும் கொடுஞ்செயலுக்கு உடன்படாராய், சென்னை நகராண்மைக் கழகவேலையை உதறித்

தள்ளினர். அஞ்சுவதுமில்லை அஞ்சவருவதுமில்லை என வீர முழக்கம் செய்தனர். செயற்கருஞ்செயல்கள் புரிந்த புலவர் திருநாவுக்கரசர் உண்மை, வீரம், தன்னுரிமை, தன்னலமறுத்தல் ஆகிய தொண்டின் சிறப்பினை நிறுவி வெற்றியுற்றனர். இவர் காலத்தினுற் செய்த உதவியை, ஞாலத்தின் மாணப் பெரிதெனக் கருதித் தமிழ்நாடு நன்றியுடன் புகழ்கின்றது. "அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற்று" என்பது பொய்யா மொழி.

---

தமிழ்ப்பொழில் :—இத்திங்கள் வெளியீடு தமிழ் மக்களின் ஆதரவை மிகவும் எதிர்பார்த்திருக்கின்றது. இதன் பொருட்டாக ஆண்டுதோறும் நேர்ந்துவரும் பொருளிழப்பைக் கருதாது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர் அன்புநீர் வார்த்து வளர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில் மேலைத்தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தினரும், அதன் தலைவர் திருவாளர். V. நாடிமுத்துப் பிள்ளை அவர்களும் வழக்கம்போலவே 54 துணர்களுக்கு இவ்வாண்டிலும் ஒப்பந்தந்தது எமக்குப் பேராதரவாயிற்று. இதனை நன்றியுடன் சங்கம் போற்றுகின்றது.

கீழைத்தஞ்சை சில்லாபோர்டினரின் போக்கு இதற்கு முற்றும் முரண்பட்டதாயிருக்கின்றது. தமிழ்மொழியை வளர்ப்பதே தமது பெருநோக்கமெனவாயளவில் பேசிவரும் அரசியலாரின் கொள்கைகட்கு அடிமைப்பட்டவரெனக் காட்டுவார்போல, இந்திப் பயிற்சிக்கு வேண்டுவன செய்தும், இதுகாறும் போற்றிவந்த தமிழ்ப்பொழிலை இவ்வாண்டில் புறக்கணித்தும் விட்டனர். இன்னார் பேதைமதிக்கு மிகமிக இரங்குகின்றேம்.

> ஏதிலாரார தமர்பசிப்பர் பேதை
> பெருஞ் செல்வமுற்றக் கடை.

---